
www.tamilarangam.net

# கதிர்







## இலங்கையில் மோதல்கள்
## எதுவரை தொடரும்..





* 01 யூலை 1990
* அரசியல் இதழ்: 01
* அன்பளிப்பு: 5 DM.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கதிர்

* 01 யூலை 1990
* அரசியல் இதழ்: 01

* அன்பளிப்பு: 5 DM.

கடல் கடந்து வாழும் இலங்கை மக்களுக்காக மேலும் ஒரு புதிய பத்திரிகை-"கதிர்". ஆசிரியர் குழுவின் இந்தப் பக்கத்தில் முதன் முதலாக எங்கள் நோக்கங்களை அறிமுகம் செய்வதற்காக சந்தித்துக் கொள்கிறோம்.

இலங்கையின் வட கிழக்கு மாகாணம் மேலும் ஒரு முறை ரணகளமாகக் காட்சியளிக்கையில் இது வெளிவந்திருக்கின்றது. புற்றீசல்கள் போல் எண்ணற்ற சஞ்சிகைகள் புலம் பெயர்ந்து வாழும் மக்களுக்காக வெளிவந்து, அவற்றில் பல இடைநிறுத்தப்பட்டு, சில காத்திரமானதாகத் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருக்கும் சூழலில், கதிர் வெளியாகிறது. இது முற்றிலும் ஓர் அரசியல் ஏடு. எந்தச் சஞ்சிகைக்கும் கதிர் போட்டியான ஒன்றல்ல; இன்றைய காலத்தின் அரசியல் தேவையைக் கருதியே வெளியாகிறது.

தமிழ் பேசும் மக்கள் விடுதலை இயக்கங்களையும், விடுதலைப் போரையும் வாஞ்சையோடு அரவணைத்துக் கொண்ட காலம் ஒன்றிருந்தது. விடுதலைப் போராளிகளைத் தமிழ் பேசும் மக்கள் தமது இரட்சகர்களாகக் கருதிய காலம் அது. திம்புப் பேச்சுவார்த்தை வரை இது நிலவியது எனக் கருத முடியும். இதன்பின் இலங்கை இராணுவம் பலமாகிப் போக, இராணுவ இலக்குகள் கனமாகிப் போனதும் விடுதலை இயக்கங்கள் தமக்குள்ளேயும், மாற்று இயக்கங்களுடனும் குரோதங்களையும், மோதல்களையும் வளர்க்கத் தொடங்கினர். ஒன்றை ஒன்று அழிக்கும் நிலைவரை இவை வளர்ந்த போது மக்கள் நிர்க்கதியாகினர். அவர்கள் சகோதரச் சண்டைகளைச் சகித்துக் கொள்ள மறுத்தனர்.

இந்தக் குழப்பத்தில் எதிரிகள் விழித்தெழுந்து தமது நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக எவ்வாறு இயக்கங்களை கையாள வேண்டுமென்பதில் தேர்ச்சி பெற்றுவிட்டனர்.

தமிழ் பேசும் மக்களின் அரசியலை இயக்க விரோதங்களே ஆக்கிரமித்து இருக்கின்றன. இதில் இருந்து விடுபட்டு தகுந்த இலக்கு நோக்கிச் செல்லத் தயாராக இருக்கும் மக்களின் எண்ணங்களுக்கு இந்த வெளியீடு உறுதுணையாக இருக்கும்.

இலங்கையில் தொடர்ச்சியாக ஏற்பட்டு வந்த இன்னல்களினால் கடல் கடந்து பல வருடங்களாக வாழ்ந்து வரும் மக்கள் எமது சமூக அமைப்பின் ஒரு புதிய விரிவாக்கமாக மாறிப் போயுள்ளனர். கடல் கடந்து வாழும் இம் மக்கள் இங்கு எதிர் நோக்கும் புதிய அடக்குமுறைகளுக்கு எதிராகவும் கதிர் குரல் கொடுக்கும்.

இலங்கை நிலைமைகளையும், சர்வதேச விவகாரங்களையும் உள்ளடக்கமாக வைத்து வெளிவரும் "கதிர்" ஆக்கபூர்வமான விமர்சனங்களையும்,ஆலோசனைகளையும் உள்வாங்கிக் கொள்ளத் தயாராக இருக்கிறது. அவற்றை ஆதாரமாக வைத்துத் தன்னைச் செழுமைப் படுத்திக் கொள்ளவும் விரும்பியிருக்கின்றது.

முகவரி:

"KATHIR"
C/O IPF
FRAENKELN UFER 22
1000 BERLIN 36
WEST GERMANY.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வட-கிழக்கு மோதல்கள் எதுவரை தொடரும்?

'OSAI' 6 RUE HERMEL 75018 PARIS FRANCE

## இந்தியா தலையிட மீண்டும் தயாராகுமா?

இலங்கையின் வட கிழக்கு மாகாணத்தில் ஆரம்பமான மோதல்கள் பலராலும் முன்னர் அனுமானிக்கப்பட்ட ஒன்றே!. 6வது திருத்தச் சட்டம் பற்றியும், புதிய தேர்தலை நடத்துவது குறித்தும் அரசியல் இழுபறிகள் நிலவி வந்த காலத்தில் விடுதலைப் புலிகளும், இலங்கை இராணுவமும் இராணுவ ரீதியில் தயாரிப்புகளைச் செய்தவண்ணம் மோதும் சந்தர்ப்பத்தை எதிர்நோக்கியே வந்திருந்தன.

யூன் மாதம் 8ம் திகதி அன்று வவுனியாவில் இருந்து முல்லைத்தீவு நோக்கி புறப்பட்ட இலங்கை இராணுவம், விடுதலைப் புலிகள் வைத்திருந்த தடைகளை உடைத்துக் கொண்டு நகரத் தொடங்கியதும் துப்பாக்கிப் பிரயோகங்கள் இரு தரப்பிலும் மேற்கொள்ளப்பட்டன. இதில் இலங்கை இராணுவக் கோப்றல் ஒருவர் ஸ்தலத்திலேயே பலியானார்; 10 இராணுவத்தினர் காயமடைந்தனர்.

இம் மோதலைத் தற்செயலானது என வர்ணித்த இலங்கை அரசு மோதலை தவிர்ப்பதற்குரிய காரியங்களில் ஈடுபடத் தொடங்கியது.

இச் சம்பவம் நடந்து மூன்று நாட்களின் பின் மட்டக்களப்பில் பிரதி பொலிஸ் மாஅதிபர் அலுவலகத்தில் பணியாற்றும் சிங்கள இளைஞர் ஒருவருக்கும் முஸ்லிம் இளைஞர் ஒருவருக்கும் இடையில் தனிப்பட்ட விவகாரங்களுக்காக ஏற்பட்ட கைகலப்பை அடுத்து விடுதலைப் புலிகள் பொலிஸ் நிலையங்களை முற்றுகையிடத் தொடங்கினர். இவர்கள் பொலிசார் வசமுள்ள ஆயுதங்களைக் கைப்பற்றியதுடன் அவற்றை மூடவும் உத்தரவிட்டனர். இவ்வேளைகளில் வீதியில் ரோந்து சென்ற இராணுவத்தினர் மீது தாக்குதல் நடத்தியதில் 11 இராணுவத்தினர் மாண்டு போயினர்.

வவுனியாவிலும், மட்டக்களப்பிலும் நடந்த இந்த உரசல்கள் வட கிழக்கு எங்கும் பாரிய மோதல்களாக பரவின. இம்மோதல்களை தணிக்கும் முகமாக இலங்கை அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இணக்கம் காணப்பட்ட யுத்த நிறுத்தமும் நடைமுறைக்கு வராமல் போனது. இப்போது, இலங்கை இராணுவம் 1987க்கு முன்னர் தான் நிலை கொண்டிருந்த பகுதிகளில் படைக் குவிப்பு செய்து தனது ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்ட முற்பட்டு வருகின்றது.

வட-கிழக்கு மோதல்கள் எதுவரை தொடரும் என்பதும் இவை மீண்டும் இந்தியத் தலையீட்டுக்கு வழிவகுத்து விடுமா என்பதுமே இன்றைய கேள்விகளாக இருக்கின்றன.

இலங்கை, இந்திய அரசுகளுக்கும், விடுதலை இயக்கங்களுக்கும் வட கிழக்கில் ஏற்பட்டுள்ள இம் மோதல்கள் அதிர்ச்சியளிப்பதாயில்லை. இவை இத்தகைய மோதல் ஒன்றை கருத்திற் கொண்டே தமது கடந்த கால போக்குகளை நிர்ணயித்து வந்துள்ளன. ஆயினும் இத் திடீர் மோதல்கள் உருவாகியுள்ள காலவேளையானது சில சக்திகளின் போக்குகளில் தடுமாற்றங்களை ஏற்படுத்தியிருப்பதும் தவிர்க்கமுடியாததாகும்.

### இராணுவ நடவடிக்கைகளில் மீண்டும் இறங்கியுள்ள இலங்கை அரசு



இலங்கை அரசுக்கு இம் மோதல்கள் இப்போது ஏற்பட்டிருப்பது தடுமாற்றங்களைக் கொடுத்துள்ளது.

இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா இரு விடயங்களைக் கருத்திற் கொண்டே தனது அணுகுமுறைகளை வகுத்து வந்தார். அவர் வட கிழக்கில் அமைதியைப் பேணிவந்து மேற்கு நாடுகளின் கவனத்தைப் பெரிதும் ஈர்த்திருந்தார். இதனால் மேற்குலக நாடுகளிடமிருந்து கணிசமான பொருளாதார உதவிகளும் கிடைக்கத் தொடங்கியிருந்தன. இவற்றிற்கு குந்தகம் ஏற்படாத வகையில் நடந்து கொள்ள வேண்டிய நிலையிலேயே அவர் இருந்தார். இதனாலேயே இந்தியாவுடன் நெருக்கமான உறவை வைத்துக் கொள்ளவும் தயங்கி வந்தார். இந்தியா விரும்பி நின்ற நட்புறவு உடன்படிக்கையிலும் கைச்சாத்திடுவதையும் தவிர்த்து வந்தார்.

ஜனாதிபதி பிரேமதாச கவனத்தில் கொண்ட அடுத்த விடயம் கட்சிக்குள்ளான அவரது செல்வாக்குப் பற்றியதாகும். ஐக்கிய தேசியக் கட்சியில் ஜயவர்த்தனாவுக்கு அடுத்ததாக இடம் பெற்ற போதிலும் கட்சியின் சில அங்கத்தவர்களால் இன்னமும் வேண்டத் தகாதவராகவே நோக்கப்பட்டு வருகிறார். இதனால் கட்சிக்குள் எழுந்துள்ள எதிர்ப்புக்களை முறியடித்து தனது நிலைகளை வலுப்படுத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார். இதற்காக அவர் கட்சிக்குள் களை எடுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். அமைச்சரவை புனரமைப்பின் போது ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்ட நாள் உறுப்பினரும், பெருந்தோட்டத் துறை அமைச்சருமான திரு. காமினி திசநாயக்காவை அமைச்சரவையில் இருந்து நீக்கி, சாதாரண கட்சி உறுப்பினராக்கியமை இவரது களை எடுப்புப் பணியின் ஒரு வெளிப்பாடாகும்.

இவ்விரு விடயங்களையும் கருத்திற் கொண்டு இன்றைய ஜனாதிபதி அணுகுமுறைகளை வகுத்து வந்த வேளையிலேயே இம்மோதல்கள் ஆரம்பமாகியுள்ளன.

மேற்கு நாடுகளின் பொருளாதாரத் துணையுடனும், கட்சிக்குள் நிலவும எதிர்ப்புக்களின் மத்தியிலும், வட கிழக்கு மோதல்களை இன்றைய ஜனாதிபதி சந்திக்க வேண்டியுள்ளது.

தனது இராணுவத் தளபதிகளை அழைத்து வட கிழக்கு நிலைமைகளை எதிர்கொள்வதற்கான உயர்மட்ட ஆலோசனைகளை அவசரமாக நடாத்தியிருந்தார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விடுதலைப் புலிகளின் ஆயுதங்களைக் களைவது என்ற அறிவிப்பின் கீழ் இராணுவத்தை வட கிழக்கில் செயற்பட வைப்பது மீண்டும் இந்தியாவுக்கு வாய்ப்பளித்து விடுமா என்பது பற்றியே இங்கு நீண்ட நேரம் ஆராயப்பட்டது. பேச்சுவார்த்தைக்கான சந்தர்ப்பத்தையும் அதற்கு ஏதுவான பிராந்தியம் ஒன்றையும் பேணிக்கொண்டே இராணுவச் செயற்பாடுகளை முடுக்கி விடப்பட வேண்டும் என்பதில் கருத்து ஒருமிப்பு காணப்பட்டது. குடாநாட்டில் "ஒப்பரேசன் விபரேசன்" 87ல் மேற்கொண்டதனாலேயே இந்திய இராணுவம் வருவதற்கு சந்தர்ப்பம் வாய்த்தது என்ற கணிப்பின் கீழ் குடாநாட்டை நெருக்கடி குறைந்த பிரதேசமாக வைத்துக் கொள்வதில் கவனம் செலுத்தப்பட்டது. கிழக்கு மாகாணத்திலும், வன்னியிலும் இராணுவச் செயற்பாட்டை முடுக்கி விடுவதன் மூலம் விடுதலைப் புலிகளை வழிக்குக் கொண்டு வர முடியும் எனவும் ஆராயப்பட்டுள்ளது. இதன் அடிப்படையிலேயே வட கிழக்கிற்கான இராணுவத் தீர்வைக் காண்பதில் தற்போது ஜனாதிபதி பிரேமதாசா முயன்று வருகின்றார்.

## இழந்துபோன தன் நடுவர் பாத்திரத்தை மீட்கவிரும்புகிறது இந்தியா



இலங்கையில் ஏற்பட்டுள்ள குழப்ப நிலையானது இந்திய அரசுக்கு குளிர்ச்சியை ஏற்படுத்தும் என்பது புதிதான விடயம் அல்ல. இந்திய இராணுவத்தை இலங்கையில் இருந்து மீளப் பெற்ற போது இந்தியா எதிர்பார்த்த சூழ்நிலை இப்போ கனிந்து இருக்கிறது.

இந்தியாவின் இலங்கை தொடர்பான இன்றைய வி.பி.சிங் அரசின் கொள்கைகள் பின்வாங்கல் போல் தோற்றமளித்து வந்தாலும் அடிப்படையில் பாரிய மாற்றம் எதுவும் அற்ற ஒன்றாகும். 1987 வரை இந்திய அரசு வகித்து வந்த நடுவர் பாத்திரத்திற்கு முன்னைய பிரதமர் ராஜீவ் காந்தி இராணுவத்தை அனுப்பியதன்மூலம் களங்கம் கற்பித்து விட்டார் என்பதே இன்றைய பிரதமர் வி.பி.சிங்கின் வாதமாகும்.


87ம் ஆண்டுக்கு முன்னர் எவ்வாறு இலங்கை இனப்பிரச்சனை கையாளப்பட்டதோ அதுபோலவே இனியும் நடந்து கொள்ளவேண்டும் என்ற தீர்மானத்தில் இவர் அவதானமாக இருக்கிறார். இந்த அணுகு முறைக்கு முன்னால் தமிழக முதல் அமைச்சர் பயன்பட்டது போல் இன்றைய தமிழக முதலமைச்சர் கருணாநிதியை முதன்மை வகிக்கச் செய்து செயற்படுவதே பொருத்தமானது என்ற தீர்மானத்தில் உள்ளார்.

அதேவேளை மத்திய அரசானது இலங்கை அரசுடன் நேரடிப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு பொருளாதார மற்றும் நட்புறவுகளைப் பேணிக்கொள்வதன் மூலம் மேற்குலக நாடுகளுக்கும் இலங்கைக்குமுள்ள உறவுகளை ஊடறுக்க முடியும் எனவும் எண்ணம் கொண்டுள்ளது.

மத்திய அரசின் இப்போக்குகளுககமையவே தமிழக அரசின் முதலமைச்சர் கருணாநிதி விடுதலை இயக்கங்களுடனான உறவைப் பேணி வந்துள்ளார். விடுதலைப் புலிகளுடன் நெருக்கமாகவும், ஈ.பி.ஆர்.எல்.எவ். உடன் தூர விலகியும் மாறுபட்ட உறவு நிலைகளைக் கடைப்பிடித்து வருகின்றார். வட கிழக்கு மாகாண அரசில் பங்குபற்றிய அனைத்து இயக்கங்களும் முன்னைய பிரதமர் ராஜீவ் காந்தியின் ஆதரவாளர்கள் என்ற முத்திரையுடனேயே இன்றைய மத்திய. மாநில அரசுகள் அணுகி வருகின்றன. இதனால் இவர்களது வெறுப்புக்கள் இச்சக்திகளின் மீது விழுவது தவிர்க்க முடியாத ஒன்றாகும். அண்மையில் ஈ.பி.ஆர்.எல்.எவ். இன் செயலதிபரும் அவரது தலைமைத்துவத்தின் முக்கிய உறுப்பினர்களும் தமிழகத்தில் வைத்துக் கொல்லப்பட்டபோது "அது அவர்களது விதைப்பின் அறுவடை" என்ற பாங்கிலேயே தமிழக முதல்வர் கருணாநிதி பதிலளித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை இராணுவத்தினருக்கும் மோதல் ஏற்பட்டுள்ள இன்றைய நிலையில் முதல்வர் கருணாநிதி விடுதலைப் புலிகளின் ஆதரவைத் திரட்டுவதன் மூலம் மத்திய அரசின் நடுவர் பாத்திரத்தை மீட்டுக் கொள்வதிலேயே நாட்டமுடையவராக இருக்கின்றார்.

## இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்பட தயாராகிறது. ஈ.பீ.ஆர்.எல்.எப்.



விடுதலைப் புலிகளைப் பாசிச சக்திகள் எனப் பிரச்சாரம் செய்து அவர்களை அழித்தொழிக்க புறப்பட்ட ஈ.பி.ஆர்.எல்.எப்.இன் தலைமைத்துவம் சென்னையில் வைத்து அழிக்கப் பட்டுள்ளது. இவ்வியக்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரும், இவ்வியக்கத்தின் கடந்த கால முடிவுகளை அமுலாக்குவதில் முக்கிய பங்காற்றியவருமான திரு. பிறேமச்சந்திரனின் தலைமையில் தொடர்ந்து இயங்க ஏற்பாடாகியுள்ளது. இச் சூழ்நிலையில் அவர்களது செயற்பாட்டை அறிந்து கொள்வதற்கு ஈ.பீ.ஆர்.எல்.எப்.இன் கடந்த காலங்களை ஆதாரமாகக் கொள்வது பொருத்தமானதாகும்.

"இம்மாத இறுதியுடன் இந்தியப்படை வெளியேறிவிடும். அவர்களுடன் நானும் வெளியேறிவிடுவேன். தலைமறைவாக வாழ்வேன். இங்கிருந்து சாக நான் முட்டாள் அல்ல."

-இவ்வாறு முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் இந்திய இராணுவத்தின் இறுதிப்படைப்பிரிவு வெளியேறிய போது தனது நிலைமையை ரொயிற்றர் செய்தி நிருபருக்குக் தெரிவித்திருந்தார்.

முதலமைச்சருடன் நாட்டைவிட்டு வெளியேறிய வட-கிழக்கு மாகாண சபையின் முக்கிய அங்கத்தவர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் இந்திய மத்திய. மாநில அரசுகள் ஆதரவு வழங்காத நிலையில் இலங்கை அரசின் தயவைத்தேடி ஈ.பி.ஆர்.எல்.எவ். செயல்படத்தொடங்கியது.

அவர்களுக்குக் கிடைத்த பாராளுமன்ற ஆசனங்களைப் பயன்படுத்தி இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்திருந்தனர். யாழ்ப்பாண பாராளுமன்ற உறுப்பினர் திரு.பிரேமச்சந்திரன் தலைமையில் தமது கட்சி முன்வைத்த 19 அம்சக் கோரிக்கைகளை வைத்து இலங்கை அரசின் உறவைத் தோற்றுவிக்க விரும்பினர். தமது 19 அம்சக் கோரிக்கைகளை அரசு பரிசீலிக்குமானால், இந்திய இராணுவம் இருக்கும் போது செய்த ஈழப்பிரகடனத்தை இரத்துச் செய்ய தயாராக இருப்பதாகவும் அறிவிப்பு செய்தனர்.

ஆயினும் இலங்கை அரசு அப்போது தான் கொண்டிருந்த விடுதலைப்புலிகளுடனான உறவை சீர்குலைக்க விரும்பாது தட்டிக்கழிக்கத் தொடங்கியது. இந்த 19 அம்சக் கோரிக்கையை சர்வகட்சி மாநாட்டில் சகல கட்சிகளுடனும் விவாதித்து முடிவெடுக்கும்படி கூறி நழுவிக் கொண்டது.

இன்றைய ஈ.பி ஆர்.எல்.எவ்., இந்திய அரசால் ராஜீவின் ஆதரவாளர் எனவும், இலங்கை அரசால் இந்தியப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பிரதிநிதிகள் எனவும் நோக்கப்பட்டு புறக்கணிக்கப்பட்டுள்ளனர். இந்திய இராணுவம் இருக்கும்போது அதிகாரத்தைக் கைப்பற்றிக் கொண்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். வட-கிழக்கு மாகாணம் முழுவதும் "ஜனநாயகத்தின் காவலன், அராஜகத்தின் சிம்ம சொப்பனம்" என்ற தலைப்பில் சுவரொட்டி பிரச்சாரம் செய்திருந்தனர். சில மாதங்களில் அவர்களது நடைமுறை அராஜகத்தின் சிம்மாசனமாக மாறியதால் மக்களிடமிருந்தும் அந்நியமாகிப் போயுள்ளனர்.

ஈ.பி.ஆர்.எல்.எப். இன் கடந்த கால அரசியல் முடிவுகளின் விளைவாக இன்றைய அரசியல் சூழ்நிலையில் அவ்வியக்கம் சக்தியற்ற ஒன்றாக மாறிப் போயுள்ளது. வட கிழக்கில் ஏற்பட்டுள்ள இன்றைய மோதல் நிலையைப் பயன்படுத்தி இலங்கை அரசை நெருங்கி இலங்கை இராணுவத்துடன் இணைந்து வட-கிழக்கில் மீண்டும் செயற்பட துடிக்கின்றது. இதன் மூலம் விடுதலைப்புலிகளை அழித்தொழிக்கும் தமது இலக்கிற்கு முன்னர் இந்திய இராணுவத்துடன் செயற்பட்டது போல தற்போது இலங்கை இராணுவத்துடன் இணைந்து செயற்பட தயாராகவுள்ளது. இதன் மூலம் இழந்த தன் சக்தியை மீட்க முடியுமென எண்ணியுள்ளது.



## தற்காப்பு இராணுவ நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்போவதாக ஈரோஸ் கூறுகிறது

வட கிழக்கில் நடைபெற்று வரும் போராட்டங்களை எப்போதும் இடைக்கால ஏற்பாடாக எடைபோடும் ஈரோஸ் இயக்கம் தற்போது தோன்றியுள்ள மோதலில் இதே போக்கையே கடைப்பிடிக்கும் அறிகுறிகளே தென்படுகின்றன. வட கிழக்கில் நடைபெற்றுவரும் தேசிய விடுதலைப் போராட்டத்தில் மூழ்கிப்போகாமல் வட கிழக்கு மலையகம் உள்ளிட்ட நிரந்தர தீர்வொன்றை நோக்கியே தாம் செயற்படுவதாக ஈரோஸ் எப்போதும் கூறிவருகின்றது. வட கிழக்கை மையமிட்ட தீர்வுகள் அனைத்தையும் இடைக்காலத் தீர்வாகச் சுட்டிக் காட்டும் இவ்வியக்கம் அதில் பங்கெடுத்துக்கொள்ளாது தவிர்த்து வந்துள்ளது.

1987 யூலையில் இலங்கை இந்திய ஒப்பந்தம் ஏற்பட்டபோது வட கிழக்கில் ஆயுதங்களை ஒப்படைத்த ஈரோஸ், இவ் ஒப்பந்தத்தின் கீழ் உருவாக இருந்த இடைக்கால நிர்வாகத்தில் பங்கேற்க மறுத்தது. இதில் தனக்காக ஒதுக்கப்பட்ட ஆசனங்களையும் ஏற்க மறுத்தது. இலங்கை இந்திய ஒப்பந்தத்தின் கீழ் நடைபெற்ற வட கிழக்கு மாகாணசபைத் தேர்தலைப் புறக்கணித்து, மாகாண சபையில் அங்கத்துவம் பெற மறுத்தது.

இயக்கங்களிடையே ஐக்கியம் நிலவ வேண்டும் என்ற கருத்தை வலியுறுத்தி வந்த ஈரோஸ் ஒப்பந்தத்தின் பின் ஆயுதங்கள் அற்ற நிலையில் இருந்த போது மாற்று இயக்கங்களின் தாக்குதலுக்கும் அச்சுறுத்தலுக்கும் ஆளானது. ஈ.பி.ஆர்.எல்.எப்.-37, புளொட்-11, ஈ.என்.டி.எல்.எப்.-10 ,புலிகள்-06, ரெலோ-03 தமது உறுப்பினர்களை கொலை செய்துள்ளதாக அறிவித்திருந்தது.

இதனால் இயக்க ஐக்கியத்தை வலியுறுத்துவதற்கு முன்னதாக தனது சுயநிலைப்பாட்டினை உறுதிப்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டது. பாராளுமன்றத் தேர்தலில் நின்று தனது சுய அடையாளத்தை நிலைநாட்டிக் கொண்டது. விடுதலைப்புலிகள் தேர்தலைப் பகிஷ்கரிக்கும் படி கோரிய நிலையிலும் ஈ.பி.ஆர்.எல்.எப். ஈரோஸ் உறுப்பினர்களை சந்தர்ப்பம் தேடி அழித்துக் கொண்டிருந்த நிலையிலும் பாராளுமன்றத் தேர்தல் மூலம் வட கிழக்கில் பெரும்பான்மைப் பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொண்டது.

வட கிழக்குத் தேசிய விடுதலைப் போராட்டத்தில் விடுதலைப் புலிகளை முதன்மை சக்தியாக ஏற்றுக் கொள்ளும் ஈரோஸ் இயக்கம், தன்னை இப் போராட்டத்தின் ஆதரவு சக்தியாக அடையாளம் காட்டி இணக்கப் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றது. விடுதலைப்புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் ஈரோஸ் நிறைவேற்றுச் செயலாளர் பாலகுமாரனுக்குமிடையே இரு தடவைகள் சந்திப்புகள் நடைபெற்றுள்ளன.

வட கிழக்கில் இலங்கை இராணுவம் தொடர்ந்தும் வன்முறையில் ஈடுபடுமாயின் அதனை எதிர்கொள்ள தற்காப்பு இராணுவ நடவடிக்கைகளை தமது இயக்கம் ஆரம்பிக்கும் என ஈரோஸ் நிறைவேற்றுச் செயலாளர் தெரிவித்துள்ளார்



## இராணுவ சமநிலையை தேடும் விடுதலைப் புலிகள்

வட கிழக்கில் உள்ள மோதல்கள் எதுவரை தொடரும் என்கின்ற கேள்விக்கு விடுதலைப் புலிகள் விரும்பி நிற்கும் இலக்கில் இருந்தே பதில் காணமுடியும்.

இந்திய இராணுவம் இலங்கை வந்து இயக்கங்கள் வசமுள்ள ஆயுதங்களை களைவதற்காக விடுதலைப் புலிகளுடன் 87ஐப்பசி 10 முதல் மோதலில் ஈடுபட்ட போது விடுதலைப் புலிகளுக்குத் தம்மைப் பாதுகாப்பதற்கான தற்காப்பு யுத்தம் ஒன்றில் இறங்க வேண்டி இருந்தது. சுமார் இரண்டரை வருட காலமாகத் தொடர்ச்சியாக நடைபெற்ற இம் மோதலின் மூலம் தமது இயக்கத்தைப் பாதுகாத்த விடுதலைப் புலிகள், இந்திய இராணுவம் உருவாக்கிய தமிழ்த் தேசிய இராணுவத்தை இந்திய இராணுவ வெளியேற்றத்தின் பின் விரட்டியடித்து வட கிழக்கு எங்கணும் பரவலாக நிலை கொண்டிருந்தனர். இதன் மூலம் மனோதிடம் பெற்று வட கிழக்கின் பாதுகாப்பு என்பது தமது தலைமையின் கீழேயே நிறுவப்பட வேண்டிய ஒன்று எனவும் பிரகடனம் செய்திருந்தனர். இதை இலக்காக வைத்தே இலங்கை அரசுடனான பேச்சுவார்த்தையிலும் ஈடுபட்டிருந்தார்.

"எங்களிடம் ஆயுதங்களை ஒப்படைக்கும் படி கேட்பதை விடுத்து நாம் ஏன் ஆயுதங்கள் ஏந்தியுள்ளோம் என்பதற்கான காரணங்களை நீக்கும்படி இலங்கை அரசிடம் கேட்டுள்ளோம்."- இலங்கையை விட்டு இந்திய இராணுவம் வெளியேறியதும் பத்திரிகையாளரைச் சந்தித்த விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் தமது நிலைப்பாட்டை இவ்வாறு தெரிவித்திருந்தார். இக் கூற்றின் பலம் பலவீனங்களைப் புரிந்து கொண்ட ஜனாதிபதி பிரேமதாசா விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தையைத் தொடருவதில் ஆர்வம் காட்டி வந்தார். இப்பேச்சுவார்த்தையில் 6-வது திருத்தச் சட்டத்தை நீக்குதல், மாகாண சபையைக் கலைத்தல், வட கிழக்கில் புதிய மாகாணசபைத் தேர்தலை வைத்தல் ஆகிய விடயங்களில் சம்மதம் தெரிவித்து அரசியல் ரீதியான சமரசம் ஒன்றிற்குத் தயாரானவராகக் காட்டிக் கொண்டார்.

அரசியல் சமரசம் நடைபெற்று வந்த வேளையில் வட கிழக்கில் உள்ள இராணுவ முகாம்கள் பலப்படுத்தப்பட்டு வந்தன. கிழக்கு மாகாணத்தில் அத்துமீறிய குடியேற்றத் திட்டங்களும், புதிய இராணுவ முகாம்களும் அதிகரித்து வந்தன. வட கிழக்குத் தேர்தலுக்கு முன்னதாக விடுதலைப் புலிகள் ஆயுதங்களை ஒப்படைத்து விடவேண்டும் என்ற கோரிக்கை இடையிடையே பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினாவால் விடுக்கப்பட்டு வந்தது.

இப் பின்னணியில் உருவான பதற்ற நிலையே ஆனி 8ம் திகதி முதல் மோதல் நிலை ஒன்றுக்கு இட்டு வந்தது. தற்போதைய விடுதலைப் புலிகளின் மோதலானது இராணுவச் சமநிலை ஒன்றை இலக்காகக் கொண்டே தொடுக்கப்பட்டு வருவதாக அவதானிக்கப்படுகிறது. இம் மோதல் 87க்கு முற்பட்ட காலகட்டத்தையே நினைவுக்குக் கொண்டு வந்துள்ளது. ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# 2,40,000 மலையக மக்களின் எதிர்காலம் இலங்கையிலா? இந்தியாவிலா?

## இரு நாடுகளின் பகடைக்காயாக மலையக மக்கள்

• ஜி.ரமேஷ் •

"இலங்கையில் உள்ள இந்திய கடவுச்சீட்டுப் பெற்ற இந்திய வம்சாவளியினர் அனைவரும் நாட்டை விட்டுப் போய்விட வேண்டும். குடிவரவு, குடியகல்வு சட்ட விதிகளின்படியும், ஒப்பந்தங்களின் படியும் நாங்கள் நடந்து கொள்ள வேண்டி இருக்கின்றது".

இவ்வாறு இலங்கையின் பாதுகாப்புத்துணை அமைச்சரும், பெருந்தோட்ட அமைச்சருமான ரஞ்சன் விஜயரட்னா கொழும்பில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் அறிவித்திருந்தார்.

1964ல் இயற்றப்பட்டு 1980ல் காலாவதியாகிப் போன சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தத்தின் சரத்துக்களின்படி இன்னமும் இந்தியா செல்லாத மலையக மக்களை நாட்டைவிட்டு வெளியேற்றும் பணியை துரிதப்படுத்த வேண்டும் என்ற தீர்மானத்தை வைகாசி மாத ஆரம்பத்தில் இலங்கை அரசின் அமைச்சரவை மேற்கொண்டிருந்தது.

இத்தீர்மானங்கள் அறிவிக்கப்பட்டு இரு நாட்களின் பின் புதுடெல்கி அதிகாரி ஒருவர் பதில் அளிக்கும் முகமாக-"இலங்கையில் இருந்து இந்தியப் பிரஜைகளைத் திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளும், இந்தியாவில் இருந்து இலங்கை அகதிகளைத் திருப்பி அனுப்புவதும் ஒரே நேரத்தில் நடைபெறும் என்றே இலங்கை- இந்திய ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது." என அறிவித்திருந்தார்.

இச்சரச்சைகளை அடுத்து இலங்கையில் மலையகப் பகுதிகளிலும், ஏனைய பகுதிகளிலும் மலையக மக்களை வெளியேற்றும் முடிவுக்குக் கண்டனங்களும் எதிர்ப்புக்களும் வெளிவரத் தொடங்கின. தமிழ்நாட்டிலும் இதற்கான ஏதிர்ப்புக்களைக் காணக்கூடியதாக இருந்தது. கட்சி பேதங்களுக்கு அப்பால் மனிதாபிமான அடிப்படையில் பொது ஸ்தாபனங்களும் இம் முடிவுக்கு ஆட்சேபங்களை பரவலாக தெரிவித்திருந்தன.

பலமாக எழுந்த ஏதிர்ப்புக்களின் பின்னர் இலங்கை அரசு தனது தீர்மானத்தை துரிதப்படுத்தாமல் தாமதப் படுத்த தொடங்கியுள்ளது.

இலங்கையை விட்டு பிரித்தானியர் 1948ல் வெளியேறியபோது இலங்கைப் பிரஜைகளை வரையறுக்கும் நடவடிக்கைகளில் அன்றைய பிரதமர் டி.எஸ்.சேனநாயக்க ஈடுபட்டிருந்தார். இலங்கைப் பிரஜைகளைத் தீர்மானிக்கும்போது 9,75,000 மலையக மக்களை இந்திய வம்சாவளியினர் எனக் குறியிட்டு அவர்களுக்குரிய பிரஜாவுரிமைகளையும் வாக்குரிமைகளையும் இல்லா தொழித்தார்.

### ஒப்பந்தங்கள்

பிரஜாவுரிமையை இழந்த 9,75,000 பேரையும் இந்தியா ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற அடிப்படையில் இலங்கைக்கும் இந்தியாவுக்குமிடையே பல தடவைகள் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வந்தன. 1964ல் சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் ஏற்பட்ட பொழுது இந்தியா 5,25,000 மலையக மக்களையும் இலங்கை 3,00,000 மக்களையும் தமது பிரஜைகளாக ஏற்றுக் கொள்வதென முடிவாகியது. சுமார் 15 வருடங்களில் இவற்றை நிறைவேற்றவும் இணக்கம் காணப்பட்டிருந்தது. மிகுதியான 1,50,000 மக்களை எவ்வாறு பிரிப்பது பற்றி 1974ல் பேசி முடிவு செய்வ தெனவும் தீர்மானிக்கப் பட்டிருந்தது.

இதன்படி 1974ல் ஏற்பட்ட சிறிமா-இந்திரா ஒப்பந்தமானது மீதமான 1,50,000 மலையக மக்களையும் நாட்டுக்குப்பாதியாகபிரித்துக் கொள்வதென தீர்மானம் மேற் கொண்டது. இதனால் 1974ல் 3,75,000 பேர் இலங்கைப் பிரஜைகளாகவும் 6,00,000 பேர் இந்தியப் பிரஜை களாகவும் ஆக்கப் பட்டனர்.

ஒப்பந்தத்தை அமுலாக்கும் முகமாக இலங்கை அரசு இந்தியக் கடவுச் சீட்டுப் பெற விண்ணப்பிக்கும் படி மலையக மக்களைக் கோரியது. அப்போது நாலு இலட்சம் பேர் வரையிலேயே இதற்கான விண்ணப் பங்களை சமர்ப்பித்திருந்தனர். இது இலங்கை அரசுக்கு சிக்கல்களை ஏற்படுத்தியது. இதனால் மீதமான இரண்டு இலட்சம் பேரையும் தம் இஷ்டப்படி பிரிக்க முற்பட்டனர்.

அப்போது ஏற்பட்ட இழுபறி களினாலும் கொந்தளிப்புக்களினாலும் இந்தியாவுக்குச் செல்லும் மலையக மக்களின் தொகை இலங்கை அரசு எதிர்பார்த்தது போல் அமையப் பெற்றிருக்கவில்லை. 1986ல் இந்தியா சென்றவர்கள் தொகை மொத்தமாக 3,33,843 எனக் கணிப்பிடப்பட்டுள்ளது. இதனால் 1986ல் இலங்கையில் 2,66,157 பேர் இந்தியா ஏற்கவேண்டிய பிரஜைகளாக இருந்தனர்.

### இலங்கை இந்திய முரண்பாடுகளின் மத்தியில்

இவ் ஆண்டுகளில் இலங்கை இந்திய அரசுகளிடையே நிலவிய அரசியல் விரிசல்களினால் மீதமான 2,66,157 மக்களையும் இந்தியா ஏற்க மறுத்தது. '64ல் இயற்றப்பட்ட சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் '80ம் ஆண்டுடன் முடிவடைந்து போயிருப்பதாலும் வட கிழக்கிலிருந்து தமிழ் நாட்டுக்கு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# இலக்கியச் சாளரம்

— கோபன்



# வருகிறது! சாகித்திய விழா!!

1980 ஆம் ஆண்டுக் ...ன்னர் ஒரு தசாப் ...கான சாகித்திய ...ய பரிசளிப்பு விழா ...றும் ஆகஸ்ட் மாதத் ...டைபெறவுள்ளதென ...கலாசார தமிழ் ... அலுவல்கள் இரா... அமைச்சர் அறிவித் ...ார். ஆரம்பத்தில் ...8 கால பகுதி ஒன்றாகவும், 1989 ...அண்டை தனியான ...ாலப் பகுதியாகவும் ...க் கொண்டு மொத் ... இரண்டு தொகுதி ...ள் வழங்க ஆலோசிக் ... போதும் பி... இந்த ஆலோசனை ...டப்பட்டு ஒவ்வொரு ...க்குமெனபாகுக்கு ... தேர்ந்தெடுக்கபட்டு ...தனி பரிசளிப்புக்கள் ...க்கப்படவுள்ளன. ...ாறுவாகவே இக் ...அரச ஆதரவு விழாக் ... போது 'ஆஸ்தானக் ...ஞர்கள்' அரசியல்

...ிய விழாவே, அதன் பரி மாணத்தின் கருத்தில் கொள்ளும் போது சமீப காலத்தில் இலக்கிய நிகழ்வு களில் குறிப்பிடத்தக்கதாக அமையப் போகின்றது. அவ்வப்போது சில எழுத் தாளர்களும் கலைஞர்க ளும் அமைச்சரால் கௌர விக்கப்பட்டாலும் இத் தகைய ஒரு அங்கீகரிக்கப் பட்ட இலக்கிய விழா, வொன்றின் மூலம் இலக் கிய கர்த்தாக்கள் இனம் காட்டப்படும் போது அதற் கென தனி அந்தஸ்தும் மதிப்பும் இருக்கத்தான் செய்கின்றது.

இலக்கிய விழாவுடன் சம்பந்தப்பட்ட நிகழ்ச்சிக ளாக நூல்கள் காட்சி, இலக்கிய சொற்பொழிவு கள், எழுத்தாளர் மகா நாடு, கருத்தரங்கு, கலை நிகழ்ச்சிகள் போன்றவை சுமார் 5 நாட்களுக்கு நடை பெறவுள்ளன. ஆண்டு ரீதியாக மாத்திரமன்றி

ஏனையவற்றிலும் பார்க்க தத்துவார்த்த ரீதியில் முற்போக்குக் கருத்துக் களை பொதிந்து மிளிர்வ தைக் காணக் கூடியதாக இருக்கின்றது. பிரான்சில் இருந்து வெளிவரும் இந்த சஞ்சிகையின் ஆசிரியர் கௌதமன் என்பவர்.

இப்போது தான் முதல் இதழ் வெளிவந்திருக்கின்ற போதும், ஏதோ பல வரு டங்கள் நடாத்திவிட்ட அனுபவம் காணப்படுகின்ற பல அம்சங்களை அவதா னிக்கக் கூடியதாக இருக் கின்றது. உதாரணமாக இவ்விதழின் தலையங்கத் தைக் குறிப்பிடலாம்.

'கலையும் இலக்கிய மும்' என்ற சத்திய மூர்த் தியின் ஆக்கம், இலக்கி யம் ஏன் விஞ்ஞானக் கருத் தியல் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்பதனை ஆராய்கின்றது. இதில் இவர் 'எழுத்தாளன் வாழ் க்கையை விமர்சிப்பவன் மட்டுமல்ல, அவன் வாழ்க் கையை மாற்றியமைக்கும் திறனாய்வாளன்' என்ற கருத்தினை முன் வைத்துள் ளார்.

'அழுக்கு மனிதன்' என்ற ...வதாவின் சிறு கதை மனித உணர்வுகளின் வக்கிரத் தன்மைகளை அழகாகச் சித்தரிக்கின்றது. பிரபாலதன், ஷியாவா ஆஸ்மி என்ற (இந்தி நடிகை) மக்கள் கலைஞர் பற்றிய குறிப்புரையை புதிய கண்ணோட்டத்தில் தந்துள்ளார். மாணி நாகேஸின் 'பாலஸ்தீனத்

ஆரம்பித்துள்ளது. முகவரி ஓசை, ஆர். ராதாகோபால் 5, றூ லொர்மெல், 75018, பாரிஸ், பிரான்ஸ்.

• • •

## சுவடுகள்

சுவடுகள் என்ற இந்த சஞ்சிகையும் ஏனைய வெளி நாடுகளிலிருந்து வரும் சஞ்சிகை போலவே எட் டுத் திக்குகளிலும் சென்று அல்லலுறும் இலங்கைத் தமிழ் அகதிகளின் இன்னல் கள் தொடர்பான செய்தி களைத் தாங்கி வெளிவரு கின்றது. இந்த சஞ்சிகை யைப் புரட்டிப் பார்த்த போது, இதல் இது எந்த நாட்டிலிருந்து வெளிவரு கின்றது? யார் வெளியிடு கின்றார்கள்? ஆசிரியர் யார்? போன்ற விபரங்கள் காணப்படாமை ஏமாற்ற மாக இருந்தது. என்ற போது இதன் உள்ளடக் கம் காத்திரமானதாகக் குறிப்பிடும்படியுள்ளதால் சாளரத்தின் பத்திகளில் எழுதத் தோன்றியது.

இந்த இதழில்(பங்குனி 1990) நந்தன் எதாகுதத விக்கும் சமுகதுச் சிரமழி யுடன் ஒரு சந்திப்பு என்ற

...வாசியும் பாடகருமான எம். யோகேஸ்வரனின் பேட்டி, இந்திய அமைதிப் படை இலங்கையில் தன் நோக்கம் நிறைவேறாமல் வெளியேறியமை பற்றிய அன்பாசனின் தொடர் கட்டுரை, பேராசிரியர் சி. சிவசேகரத்தின் கவி தையும் மரபும் என்ற தொடர் கட்டுரையின் இறுதி அங்கம், அபிமன்யு வின் 'ஒரு சோடி செருப் புகள்' என்ற வித்தியாச மான அன்னிய சூழலை மையமாகக் கொண்ட சிறு கதை, பாமினியின் பெண் நிலைவாதம் சம்பந்தமான கட்டுரை, 'கலை கலைக் காக' என்ற வாதத்துக் கெதிரான வானம் பாடி யின் கருத்துக்கள், ஜனக வின் மொழி பற்றிய கோட்பாடொன்றின் விஞ் ஞான ரீதியான தத்துவ விளக்கம், இந்தியாவில் பிரிவினைவாதம் சம்பந்த மான சஞ்சயனின் கட்டுரை போன்ற குறிப்பிடத்தக்க அம்சங்கள் காணப்படுகின் றன.

இவை தவிர கவிதை கள், செய்திகள் போன்ற வையும் இவ்விதழை அலங் கரிக்கின்றன.

...ாக்கு காரணமாக ...ம் 'கவனிக்கப்படுக' ...ஏனையவர்கள் ...ண்டாந் தரத் ...தள்ளப்படுவதும் ...ாதுகளில் உரத்துக் ... ...ம். கடந்த காலங்க ... அசலான கலைஞர் ...ஓரம் கட்டப்பட்டு ...ங்கள் அரியாசனம் ... சம்பவங்கள் நிறை ... இடம்பெற்றுள்ளன. ...குரியவர்கள் எத்த ... அளவு கோல்கள் ...் தேர்ந்தெடுக்கப்படு ...றனா என்ற விடயமே ...்றைத் தீர்மானிப்ப ... பெரிதும் செல்வாக்கு ...த்தும் காரணியாகும். ...டக்கப் பெறுகின்ற தக ...களின்படி இந்து கலா ..., தமிழ்மொழி அலு ...கள் அமைச்சர் இது ...யத்தில் சமூகத்தின் ...இவாய்ந்த சகல பிரிவி ...லிருந்தும் அபிப் ...ராயங்களையும், ஆலோ ...சனைகளையும் பெற்று ...வது மகிழ்ச்சிக்குரிய ...தும்.

இந்த வருடம் நடை ...றவிருக்கும் இந்த சாகித்

பிரதேச ரீதியாகவும் எழுத் தாளர்கள் தெரிவு செய் யப்பட்டு பரிசளிக்கப்பட வுள்ளனர்.

## ஓசை

உலகின் பல பாகங்க ளிலுமிருந்தும் பல கலை இலக்கிய சிற்றேடுகள் வெளிவர ஆரம்பித்துள் ளன. பெரிதும் நோர்வே, மேற்கு ஜெர்மனி, கனடா, பிரான்ஸ் அவுஸ்திரே லியா, ஐக்கிய இராச்சியம், போன்ற நாடுகளுக்குச் சென்ற இலக்கிய ஆர்வம் மிக்கத் தமிழர்கள் தமது எண்ணக் கனவுகளை எழுத் துக்களாக்கியும், தாம் எதிர்நோக்குகின்ற பிரச் சினைகளை உலகுக்கு எடுத் தியம்பவும் என இத்த கைய முயற்சியில் ஈடுபட் டுள்ளனர். மற்றும் பலர் 'தமிழ் சங்க' அமைப்புக் களை நிறுவியும் சில சஞ் சிகைகளை வெளியிடுகின் றனர்.

அந்த வகையில் தற் போது எமக்கு 'ஓசை' 'சுவடுகள்' ஆகிய இரண்டு சஞ்சிகைகள் கிடைக்கப் பெற்றுள்ளன. 'ஓசை'

தின் அரும்புகள்' என்ற கவிதை அவர்களின் எதிர் கால போராட்டத்தின் திசை என்னவென்று கோடிட்டுக் காட்டுகின்றது.

'தனியொருவனுக்கு' ... கதை, இப்பவனுக்கு இல்லாதவனுக்குமான போராட்டத்தில், இருப்ப வன் உலக நீதிகளை தனக்கு சாதகமாக வகுத் துக் கொண்டுள்ளமை யினை மீண்டும் ஒரு முறை அசை போடுகின்றது. பாண்டியன் தனது கட்டு ரையில் காதலுக்கு புதிய அர்த்தம் கண்டு பிடிக்க முனைகின்றார்.

எஸ். புவனன் தனது ஜாதிகள் இருக்குதடி என்ற சிறு கதையில் கடல் கடந் தும் ஜாதிகள் வாழ்ந்து கொண்டிருப்பதனை சுட் டிக் காட்டுகின்றார். நிட் ச்ஷயன் தனது கட்டுரை யில் சமூக வர்க்க முரண் பாடுகள் தொடர்பான கோட்பாடுகளை பிர யோக ரீதியில் அலசுமுற் படுகின்றார்.

இவ்விதம் அக்கரையில் இருந்து 'ஓசை' என்ற

---

## மட்டக்...

(10 ம் பக்கத் தொடர்ச்சி)

அரசியற்றிய "முற்குக தேசம்" இன்றைய மட்டக்களப்பு மாவட்டம் மட்டுமல்ல கல் முனைக்கு அப்பால், அக்கரைப் பற்றுக்கு அப்பால்; பொத்துவி லுக்கு அப்பால் பாணமை (பாணகை) வரை விரிந்திருந் தது. ராணி உலக நாச்சி பல இடங்களிலும் முற்குக வன்னிமை களை நியமித்து அரசியற்றிய தாகவும் அறியப்படுகிறது. அவள் முற்குக குலத்தைச் சேர் ந்தவளென்பதைச் சீரணிக்க முடியாத ஒரு சிலர் பிற்காலத் தில் அவளுக்கு "முகமூடி" போட்டுக் காண்பிப்பதற்காக அந்த ராணியை வங்காள தேசத் தவளாகச் சித்தரித்து. அதற் காகவே வங்கத்தால் (வங்காள தேசத்திலிருந்து) பலர் வந்து குடியேறியதாக கதையை மாற்றி வைத்துள்ளனர்.

அதற்காக மகாவம்ச நூலில் சொல்லப்பட்டிருக்கும் ஒரு நிகழ்வு மட்டக்களப்பு சரித் திரத்தில் நுழைக்கப்பட்டிருப் பது வெட்கக்கேடு! ஏனெனில் அந்தப் பெண்ணின் பெயர் உலக நாச்சியல்ல.

தவிரவும் — ராணி உலக நாச்சி தமிழச்சி என்பதை நிரூ பிக்க அவளின் குலக்குடிகளின் பெயர்கள் பெரும் ஆதாரமாக வுள்ளன.

ஒரு புறம் தமிழரின் வர லாறு முழுமையாக மறைக்கப் படும் போது மறுபுறம் தமிழர் தமக்குள் தாமே சாதிப் பூசல் களினால் சில வரலாற்று நிகழ்வு களை இருட்டடிப்புச் செய்ய

எத்தனித்திருப்பது பெரும் சாபக் கேடு தான். தமிழரின் சரித்தி ரம் கேள்விக்குறியாக மறைந்து போவதற்கு அதுவே முழுமுதற் காரணம்.

யாழ்ப்பாணத்தில் போர்த் துக்கேயரின் நிர்வாகத்துக்கு முற் குகர் இடையூறு விளைவித்த தால் போர்த்துக்கேயர் அவர் களை வேட்டையாடத் தலைப் படவே முற்குக குடிகளிற் சிலர் மட்டக்களப்புக்குச் சென்று காரைதீவில் குடியேறியதாக "விபுலானந்த அடிகள்" எனும் ... அருள் செல்வநாயகம் குறிப்பிட் டிருப்பது பிற்கால நிகழ்வுதான். ஆம்- அது 17 ஆம் நூற்றாண் டின் நிகழ்வாகும்.

ஆனால் மட்டக்களப்பின் வரலாற்று நூலென கொள்ளப் படும் "மட்டக்களப்பு மான் மியம்" நூலின் தொகுப்பாசிரிய ரான வித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா அவர்கள் "மட்டக் களப்பு மக்களின் வாழ்வும் வள மும்" என்ற நூலில்- முற்காலத் தில் முற்குக சாதியினரே மட் டக்களப்பில் பெரும்பான்மை யாக பரந்து வாழ்ந்தார்களென் றும், அவர்கள் கலாசாரச் சிறப் புமிக்கவர்களென்றும், ஒரு காலத்தில் மட்டக்களப்பு "முற் குக தேசம்" என அழைக்கப் பட்டதாகவும் சொல்லியிருப் பது கண்டு குறிப்பிடத்தக் கது.

மத்திய காலத்தில் பலரும் அங்கு குடியேறியதால் "முற்குக தேசம்" என்ற பெயர் வழக் கொழிந்து மட்டக்களப்பு என்ற பெயர் நிலைபெறுகிறது.

(அடுத்த இதழில் முடியும்)

www.tamilarangam.net

இலங்கை அகதிகள் ஒரு இலட்சம் பேர் வரை வந்து குவிந்திருப்பதாலும் தன்னால் ஏற்றுக்கொள்ள முடியாதென இந்தியா கூறியது.

இவ்வேளையில் இலங்கை அரசு புதிய வேஷம் தரிக்கத்தொடங்கியது. 1986ல் தாம் மலையக மக்களுக்கு பிரஜாவுரிமை வழங்கப் போவதாகப் பிரச்சாரம் செய்யத்தொடங்கியது. இதற்கான சட்டமூலம் ஒன்றையும் பாராளுமன்றத்துக்குக் கொண்டு வந்தது. இந்தியா செல்லாதுள்ள 2,66,157 பேரில் 94,000 மலையக மக்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை கிடைக்கக்கூடியதாக இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டது. இதன் பின்பு இந்தியா செல்ல வேண்டியவர்களின் தொகை 1,72,157 ஆகக் குறைந்தது. இன்று இம்மக்களின் இயற்கை அதிகரிப்புடன் கூடிய தொகை 2,40,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

இன்று இலங்கை அரசால் இந்தியப்பிரஜைகள் எனவும் இந்திய அரசால் இலங்கைப் பிரஜைகள் எனவும் தட்டிக்கழிக்கப் பட்டு வரும் 2,40,000 மலையக மக்களே "நாடற்றவரென" அடையாளமிடப்பட்டுள்ளனர்.

## இரட்டைப் பிரஜாவுரிமை

இம்மக்களின் பிரச்சினைகளுக்கு இலங்கை இந்திய அரசுகள் மேற்கொள்ளும் தம்மிச்சையான முடிவுகளை மலையகத்தில் செயற்பட்டு வரும் விடுதலை இயக்கங்களும், தொழிற்சங்கங்களும், பொது ஸ்தாபனங்களும் வன்மையாகக் கண்டித்து வருகின்றன. இலங்கை அரசு இம்மக்களை நாடு கடத்துவதில் நாட்டம் கொள்ளாது அவர்களை இலங்கைப்பிரஜைகளாக ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதே ஏகமனதான கோரிக்கையாக உள்ளது. இதற்காக இலங்கை அரசியல் அமைப்பிலுள்ள இரட்டைப் பிரஜாவுரிமைச்சட்டத்தின் கீழ் மலையக மக்களுக்கு இலங்கைப் பிரஜாவுரிமை வழங்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றன.

இக் கோரிக்கையை இலங்கை அரசு நிராகரிப்பதானது இலங்கை அரசியலமைப்பின் பிரஜாவுரிமைச் சட்டத்துக்கு முரணானது மட்டுமன்றி சர்வதேசக் குடியுரிமைச் சட்ட விதிமுறைகளுக்கும் முரணானதாகும்.

சர்வதேசக்குடியுரிமைச் சட்டவிதிகளின்படி யாவா, மலேசிய மக்கள் இலங்கையில் இரட்டைப் பிரஜாவுரிமைச் சலுகை பெற்றிருப்பது போலவும் மேற்குலக நாடுகளில் வதியும் இலங்கைப் பிரஜைகளில் கணிசமானவர்கள் இரட்டைப் பிரஜா வுரிமையைப் பெற்றிருப்பதை போலவும் 2,40,000 மலையக மக்களுக்கும் இரட்டைப் பிரஜாவுரிமை கிடைக்க வழிவகுக்கவேண்டும்.

தமது அரசியல் ஆதாயங் களுக்காக இரு அரசுகளாலும் பகடைக்காயாகப் பயன்படுத்தப்பட்டு வரும் 2,40,000 மலையக மக்களுக்கும் இரட்டைப் பிரஜாவுரிமை வழங்கும்படி கோருவது நியாயமான ஒன்றே!

●

### "நாங்கள் இந்த நாட்டில் வாழ்வதையே சந்தோசமாக நினைக்கின்றோம்."

இராமன்-இராமையா 31 வயதுடைய தொழிலாளி அவரும் அவாது மனைவியாரும், இரு பிள்ளைகளும் இந்தியக் கடவுச் சீட்டை 1982 இல் பெற்றுள்ளார்கள் ஆனால் அது 1986ம் ஆண்டுடன் காலாவதியாகிவிட்டது. "நாங்கள் அதிகம் இந்த நாட்டில் எங்கள் குடும்பத்திற்கு என்று எதுவும் சம்பாதிக்கவில்லை. ஆனாலும் இந்த நாட்டில் வாழ்வதையே சந்தோசமாக நினைக்கின்றோம்." இவ்வாறு கூறும் இராமையா "எங்களுடைய பிள்ளைகள் எவ்வாறு இந்திய வாழ்க்கையை எற்றுக் கொள்வார்கள் என்று என்னால் புரிந்து கொள்ள முடியவில்லை. இந்தியாவைப் பற்றி எதுவும் அவர்கள் அறிந்திருக்கவில்லை" எனவும் கூறினார்.



இந்தியக் கடவுச்சீட்டு கிடைக்கப் பெற்ற பெரும்பாலானவர்கள் சிறிமா-சாஸ்த்திரி ஒப்பந்தம் 1964ல் ஏற்பட்ட போது விபரமறியாத சிறுவர்களாகவே இருந்தவர்கள். இவர்களது பெற்றோர்கள் அன்றைய காலத்தில் இந்தியக் கடவுச்சீட்டுக்கு விண்ணப்பித்திருந்ததை வைத்தே இன்றைய அவர்களது சந்ததியின் மீது கடவுச்சீட்டுகள் திணிக்கப்பட்டுள்ளன. இந்தியக் கடவுச்சீட்டைப் பெற்றுக் கொள்ளும் பட்சத்தில் மட்டுமே அவர்களுடைய நாளாந்தக் கூலி 43 ரூபா வழங்கப்படும் என்ற நிபந்தனையும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இலங்கைப் பிரஜைகளையும்- இந்தியப் பிரஜைகளையும் தீர்மானித்து அவர்களுக்கு அறிவுறுத்தல் வழங்கும் போது சிலாது குடும்பங்கள் இரண்டாகப் பிரிந்து விடுகின்றன. சிறிமா-சாஸ்திரி ஒப்பந்தம் திருமண மற்றும் குடும்ப உறவுகளையும் பலமாகப் பாதித்துள்ளது.

இந்தியத் தமிழர்களை இந்தியாவுக்கு அனுப்பி வந்த பணியானது 1984ல் கப்பற் போக்குவரத்து தடை செய்யப் பட்டதுடன் இடைநிறுத்தப்பட்டிருந்தது. இப்போக்கு வாத்தை ஆரம்பித்து எப்படியேனும் இந்தியாவுக்கு திருப்பி அனுப்பி விடவேண்டுமென இலங்கை தீர்மானித்துள்ளது. 1989ம் ஆண்டில் 9% வீழ்ச்சியைக் கொடுத்த தேயிலை உற்பத்தியை மீண்டும் இலாபகாரமாக செலுத்துவதற்கு இவர்களது வெளியேற்றம் அவசியமானதென்றே இலங்கை அரசு கருதியுள்ளது.

(திரு.டெக்ஸ்ற்றர் குறுயிற்ஸ்
"சண்டே ரைம்ஸ்"
27 மே 1990)

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்திகள்

## சுவிஸ் வங்கி பாணியில் இலங்கையிலும் வங்கி

### வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஈர்க்க புதிய திட்டங்கள்!

1989ம் ஆண்டு இலங்கையில் 160 கோடி ரூபா வெளிநாட்டவர்களால் முதலீடு செய்யப்பட்டுள்ளது. அடுத்து வரும் காலங்களில் இதனைப் பன்மடங்கு பெருக்கிக் கொள்வதற்காக புதுப் புதுப் திட்டங்களை இலங்கை அரசு செயற்படுத்தி வருகின்றது.

வெளிநாடுகளில் இருந்து வந்து முதலீடு செய்பவர்களை ஊக்குவிக்கும் வகையிலும், அவர்களை நீண்டகால முதலீட்டாளராகக் கவரும் விதத்திலும் இலங்கை அரசு கொள்கை மாற்றங்களை கொண்டு வந்துள்ளது. வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நீண்டகால தங்கும் அனுமதி(Visa) வழங்குதல் அல்லது பிரஜாவுரிமை (இரட்டைப் பிரஜாவுரிமை) வழங்குவது பற்றி ஆலோசித்து வருகின்றது. இதனைத் துரிதப்படுத்தும் வகையில் கனடா, அவுஸ்திரேலியா நாடுகளின் குடியுரிமை வழங்கல் நடைமுறைகளை பரிசீலித்து வருகின்றது. இதற்கு அமைய பாரிய கொழும்பு பொருளாதார கமிஷன் தென்கொரியா, அவுஸ்திரேலியா, சிங்கப்பூர், ஜப்பான், கொங்கொங், ஐரோப்பிய நாடுகளுக்கு தூதுக் குழுக்களை அனுப்பியுள்ளது.

அங்கீகாரம் பெற்ற வர்த்தக வங்கிகள், இங்கு வதிவிடம் அற்றவர்களுக்கும் மற்றும் வெளிநாட்டவர்களுக்குமாக சுவிஸ் பாணியில் எண் வங்கி கணக்குகளை நடைமுறைப்படுத்தவுள்ளது. இதற்காக நாணயசபையை அனுமதிக்க அங்கீகாரம் வழங்கும் வங்கிச் சட்ட திருத்தங்களை நிதி அமைச்சர் வரத்தமானி மூலம் அறிவித்துள்ளார். எண்வாரியான கணக்குகள், வைப்புக் கணக்குகள், சேமிப்பு நடைமுறைக் கணக்குகள் விஸ்தரிக்கப்பட்டு வெளிநாட்டு நாணயங்களிலேயே இருக்க வேண்டுமென்று கூறுகிறது. கடத்தல், போதைவஸ்து ஆகிய குறித்து சர்வதேச ஒப்பந்தங்களுக்கு கீழ் உள்ள சட்டங்களின் குற்றச்சாட்டின்படி வழக்கு நடைபெற்றால் அல்லது பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் உயர் நீதிமன்றத்தின் உத்தரவுப்படி மனுச் செய்யப்பட்டால் அன்றி கணக்கு வைத்திருப்பவரின் பெயர், அடையாளம் இரகசியமாகவே வைத்திருக்கப்படும். அத்துடன் இந்த இரகசியத் தகவலை வெளியிடும் எந்த ஒரு வங்கி உத்தியோகத்தரும் இச் சட்டத்தின் கீழ் தண்டிக்கப்படுவர்.

## இந்த ஆண்டிற்கான சாதனை விருது ரிச்சாட்.டி.சொய்சாவிற்கு

1990ம் ஆண்டிற்கான சாதனை விருது கொல்லப்பட்ட திரு.ரிச்சாட்.டி.சொய்சாவின் ஞாபகார்த்தமாக நியூயோர்க்கில் உள்ள "இன்ரபிரைஸ்" நிறுவனம் வழங்கவுள்ளதாக அறிவித்துள்ளது. வளர்ந்து வரும் நாடுகளில் மனிதஉரிமை மீறல்களை வெளிப் படுத்துவதை அங்கீகரிக்கும் வகையில் இவ்விருது வழங்கப்படுகிறது.

எதிர்வரும் செப்டம்பர் மாதம் நியூயோர்க்கில் உள்ள ஐக்கியநாடுகள் தலைமை காரியாலயத்தில் சாதனை விருது வழங்கப்படும் என ரிச்சாட்.டி.சொய்சாவின் அன்னை திருமதி மனோராணி சரவணமுத்து அவர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சொய்சா மர்மமான முறையில் கடத்தி கொல்லப்பட்டமை குறித்து பரிசிலிக்கும்படி ஐக்கிய நாடுகள் மனிதஉரிமை ஸ்தாபனத்தை ஐக்கிய நாடுகளின் பொதுக்காரியதரிசி பெரஸ்.டி.குயில்லர் கேட்டுள்ளார்.

**ஜே.வி.பி.**

## புதிய தலைமையின் கீழ் புத்துயிர் பெற முயற்சி!

இலங்கைப் படையினரால் பல தலைமையுறுப்பினர்கள் அடுத்து அடுத்துக் கொல்லப்பட்ட போது செயலிழந்து போன ஜே.வி.பி. இயக்கத்தை மீண்டும் புனரமைத்துச் செயற்பட அதன் அடுத்த தலைமுறை முயன்று வருகிறது. சோமவன்ச அமரசிங்க என்பவரைத் தற்காலிகத் தலைவராகக் கொண்டு நிர்வாகக் குழு நிறுவப்பட்டுள்ளது. இவர்கள் தாம் மீண்டும் இயங்கப் போவதாக விசேட அறிக்கை மூலம் அறிவித்துள்ளனர்.

இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராக ஜே.வி.பி. தொடுத்த போரை அவதானித்த இந்தியப் பிரதமர் வி.பி.சிங் புத்திசாலித்தனமாக இராணுவத்தை வாபஸ் வாங்கிக் கொண்டார் என குறிப்பிட்டுள்ள இவ் அறிக்கையில் வட கிழக்கில் தோன்றியுள்ள தமிழ்த்தலைமைத் துவமானது இனவாதப்போக்குடன் செயற்பட்டு வருகின்றது எனவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தாம் விரைவில் இலங்கையில் உள்ள முதலாளித்துவ ஆட்சியைக் கவிழ்த்து புதிய ஆட்சியை நிலைநாட்டுவோமெனவும் அது தமிழ் மக்களுக்கு சமவுரிமை வழங்குமெனவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஜே.வி.பியின் இப்பிரகடனங்களின் பின்னர் சிகிரியாவில் உள்ள உல்லாசப் பயணிகள் விடுதியில் பல இலட்சம் ரூபா பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளது. சிகிரியாவைச் சுற்றியுள்ள முக்கியமான காட்டுப் பகுதியை முப்படையினரும் சுற்றிவளைத்துத் தேடுதல் நடத்தினர். இதன்போது விமானப் படைக்குச் சொந்தமான சொப்பர்(ஹெலி) விபத்துக்குள்ளாகி அதில் பயணம் செய்த அனைவரும் கொல்லப்பட்டனர்.

வெள்ளவாய என்னுமிடத்தில் எம்.எம்.குணவர்த்தனா என்ற இளைஞர் ஆயுதங்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் ஜெயவர்த்னபுர பட்டதாரி மாணவராவார்.

மாத்தளை பகுதி அதிரடி பொலிஸாரும் நாவுல பகுதி பொலிஸாரும் கூட்டாகத் தேடுதல் நடத்தியபோது சிகிரியாக் காட்டு பகுதியில் பி.ஜி.பிறேமதிலகா என்ற ஜே.வி.பி. தலைவர் கொல்லப்பட்டார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மீண்டும் இராணுவப் பிடியில் மக்கள்.

வடகிழக்கில் தோன்றியுள்ள மோதல்களைத் தொடர்ந்து இராணுவக் கொமாண்டர் ஜெனரல் டென்சில் கொப்பெகடுவ தலைமையில் கிழக்கு மாகணத்தில் "ஒப்பரேசன் கம்பாக்"(Operation Comeback) என்ற பெயரில் இராணுவ நடவடிக்கையை இலங்கை அரசு தீவிரப் படுத்தியுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் அம்பாறை, மட்டக்களப்பை அண்மித்த பகுதிகளில் தென்னிலங்கையில் இலங்கைப் படையினர் மேற்கொண்ட படுகொலைகள் பாணியில் சமபவங்கள் நடைபெற்றுள்ளன. அம்பாறை, மல்வத்த, சம்மாந்துறை, வரிபொத்தான்சேனை ஆகிய இடங்களில் இனந் தெரியாத சடலங்கள் இராணுவத்தினரால் எரிக்கப்பட்டன. கல்முனை, காரைதீவுப் பகுதிகளில் பல்வேறு இடங்களில் பலரது சடலங்கள் எரியுண்ட நிலையில் வீதிகளில் காணப்பட்டது. மட்டுநகரின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த இடங்களில் நிலை கொண்டுள்ள இராணுவத்தினர் அங்குள்ள பிரரதான இடங்களில் உள்ள கட்டடங்களைக் கைப்பற்றி அதில் நிலை கொண்டுள்ளதுடன் அப்பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்று தேடுதல்களும் நடத்தி வருகின்றனர்.

திருகோணமலைக்கும் நிலாவெளிக்குமிடைப்பட்ட 50 சதுர மைல் பரப்புப் பகுதி இராணுவத்தினரால் சுற்றி வளைக்கப்பட்டு 12 வயது தொடக்கம் 50 வயதுக்கிடைப்பட்ட ஆயிரக் கணக்கான தமிழ் மக்களைக் கைது செய்து தடுப்புக் காவலில் வைத்துள்ளதுடன் அப்பகுதியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகவும் அறிவித்துள்ளது.

கிழக்கை தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்துள்ளதாக அறிவித்த இலங்கை அரசு வட பகுதியில் குறிப்பாக விடுதலைப் புலிகளால் முற்றுகையிடப்பட்டு யாழ் கோட்டை முகாமுக்குள் சிக்கியுள்ள இராணுவத்தினருக்கு உதவி வழங்கு முகமாக குண்டு வீச்சு விமானங்கள், கெலிகொப்டர்கள், அவ்றோ விமானங்கள் என்பனவற்றைக் கொண்டு முற்றுகையை முறியடிப்பதற்காக தொடர்ச்சியான தாக்குதலை மேற்கொண்டு வருகிறது. இதனால் நகரின் பெரும்பகுதி சேதமடைந்துள்ளது. யாழ் பிரதான வைத்தியசாலை, வேம்படி மகளிர் கல்லூரி, மத்திய கல்லூரி, இலங்கை வங்கி, பெற்றோல் நிலையம், மற்றும் K.K.S வீதி, கொட்டடி, வைத்தீஸ்வரா வீதி என்பவற்றில் உள்ள நூற்றுக்குமதிகமான கடைகள், கட்டிடங்கள் என்பன சேதமாக்கப் பட்டுள்ளன. மோதல்கள் நடக்கும் பகுதிகளில் உள்ள மக்கள் அச்சம் காரணமாக அவர்களின் சொந்த இடங்களை விட்டு இடம் பெயர்ந்து அகதிகளாகியுள்ளனர்.

வட கிழக்கில் ஏற்பட்டுள்ள மோதலினால் கொழும்பு, மலையகம் எங்கும் ஆயிரக் கணக்கானோர் கைது செய்யப்பட்டுள்ளனர. வட கிழக்கு, கொழும்பு ஆகிய இடங்களில் உள்ள 65 அகதி முகாம்களில் 2 இலட்சத்திற்கும் அதிகமான தமிழ் மக்கள் தஞ்சம் அடைந்துள்ளனர்.

வட கிழக்கில் யுத்த நிலை இருப்பினும் இனப்பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கான அரசியல் நடவடிக்கைகளை அரசாங்கம் தொடருமென பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா பத்திரிகையாளரைச் சந்தித்தபோது கூறியுள்ளார். தொடர்ந்து பதிலளிக்கையில் வட கிழக்கு மாகாணசபை கலைப்பது பற்றியும் 6வது திருத்தச்சட்டம் நீக்குவது குறித்தும் அனைத்து அரசியற் கட்சிகளுடனும் ஜனாதிபதி கலந்து ஆலோசிக்கவுள்ளார் எனவும் கூறினார். இதேவேளை படையினரின் கீழ் வந்துள்ள கிழக்கு மாகாணத்தில் பொலிஸ் நிலையங்கள் மீண்டும் திறக்கப் படும் வரை இராணுவத்தின்ர் அங்கு நிலைகொண்டிருக்கும் என்றார்.

## ஈழவர் ஜனநாயக முன்னணி பாராளுமன்றத்தை பகிஷ்கரிக்கமுடிவு!

ஈரோஸ் இயக்கத்தின் வெகுஜன அணியான ஈழவர் ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் யூலை மாத பாராளுமன்ற கூட்ட தொடரி லிருந்து பகிஷ்கரிக்க தீர்மானித்துள்ளனர்.

"நாம் எந்த மக்களை பிரதிநிதித்துவப் படுத்துகிறோமோ அவர்கள் கொல்லப்படுவதை, கைது செய்யப்படுவதை எம்மால் தடுக்க முடியவில்லை. ஆகவே நாம் ஏன் தொடர்ந்தும் இத்தகைய கையாலாகாப் பதவிகளை வகிக்கவேண்டுமென்ற கேள்வி எழுகின்றது எனவே மீண்டும் ஒரு யுத்தநிறுத்தம் அறிவிக்கப்பட்டு பேச்சு வார்த்தைகள் மூலம் தீர்வு காண முயற்சி எடுக்கப்படவேண்டும்" என இம்முன்னணி விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## செய்திகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய பயணத்தில் நமீபிய மக்கள்

## சுவாப்போ(SWAPO) இயக்கத்தின் வெளிநாட்டுப் பிரதிநிதியாகச் செயற்பட்ட திரு.நீலோ ராபோபி உடன் ஒரு சந்திப்பு



**திரு.நீலோ ராபோபி:** கடந்த இருபது வருடங்களாக ஐரோப்பாவின் வெவ்வேறு நாடுகளில் நமீபிய விடுதலைப் போராட்டத்திற்கு சர்வதேச ஆதரவை திரட்டியவர். கிழக்கு ஜேர்மனியில் சுவாப்போ மாணவர் இயக்கப் பிரதிநிதியாக ஆரம்பத்தில் பணியாற்றிய இவர், பின்னர் யூகோஸ்லாவியா, செக்கோஸ்லாவிய நாடுகளில் சுவாப்போ பிரதிநிதியாக விளங்கியிருந்தார். கடந்த ஐந்து வருடங்களாக ஸ்கண்டிநேவிய நாடுகளில் பிரதிநிதியாக இருந்துள்ளார். நமீபிய சுதந்திரத்தின் பின் வெளிநாட்டு அமைச்சில் தன்பணியைத் தொடர்ந்தாற்றி வருகிறார்.

நீண்டகாலமாக வெள்ளையர்வசமிருந்த அரசியல் அதிகாரத்தை தற்போது நமீபியமக்கள் தம்வசமாக்கியுள்ளனர். இம்மக்கள் நிறவெறிக்கு எதிராக பல ஆண்டு காலமாக நிகழ்த்தி வந்த போராட்டத்தின் விளைவாக இவ்வாண்டு பங்குனி 20ம் திகதி நள்ளிரவு முதல் இது நிறைவேறியுள்ளது.

12இலட்சம் கறுப்பின மக்களும் 80,000 வெள்ளையர்களும் நமீபியாவில் தற்போதுள்ளனர். 17ம், 18ம், 19ம் நூற்றாண்டுகளில் போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர்களால் அடுத்தடுத்து ஆக்கிரமிக்கப்பட்ட நமீபியா 1884ம் ஆண்டு ஜேர்மனிக்கு அடிமையாகியது. அங்குள்ள வைரங்களை அபகரித்து வந்த ஜேர்மன் ஆட்சிக்கு எதிராக நமீபிய மக்கள் ஆமபித்த தேசிய எழுச்சிப்போராட்டத்தின் போது 1904ல் 70,000ம் நமீபிய மக்கள் கொல்லப்பட்டனர். இதன்பின் தமது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்காக குடியேறிய சுமார் 15,000 ஜேர்மனியர்களே இன்றைய நமீபியாவில் 80,000 வெள்ளையர்களாக வியாபித்து இருக்கின்றனர்.

முதலாம் உலக மகாயுத்தத்தில் ஜேர்மனி தோல்வியைத்தழுவியதும் நமீபியாவை பிரித்தானியா தனது ஆதிக்கத்தின்கீழ்கொண்டுவந்தது. நமீபியாவின் விடுதலையை ஐக்கிய நாடுகள் சபை வலியுறுத்த தொடங்கியபோது அதனை நிராகரித்து விட்டு பிரித்தானியா தென்னாபிரிக்க வெள்ளையர்களிடம் நமீபியாவைக் கையளித்து வெளியேறியது.

இன்றைய நமீபியாவின் பொருளாதாரத்தில் 83% தேசியவருமானத்தை ஈட்டிக் கொடுக்கும் கனிப்பொருட்கள் தென்னாபிரிக்காவுக்கும்,ஜேர்மனிக்கும், அமெரிக்காவுக்குமே ஏற்றுமதியாகின்றன நமீபியாவின் தேசியவருமானம் ஒரு நபருக்கு 1410 அமெரிக்கடொலராக விளங்குகின்ற வேளையில் வருமானப் பங்கீட்டின் விநியோகப்பாகுபாடு காரணமாக 92% வெள்ளையர் வசமாகவே இருந்து வந்துள்ளது. இதனால் வறுமை விகவரூபம் எடுத்தது;ஆக்கிரமிப்புக்காரருக்கு எதிரான போராட்டங்கள் ஆரம்பமாகின.

1960 சித்திரை முதல் தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் இயக்கம்(SWAPO) என்ற பெயரில் தேசிய சக்திகள் ஒன்றிணைந்து தேசிய விடுதலைப்போரை துரிதப்படுத்தினர். இப்போராட்டங்களுக்கு எதிராக நிறவெறி பூசி திசைதிருப்ப ஆட்சியாளர்கள் இடைவிடாது முயன்றுவந்தனர்.

1966ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபை நமீபியாவின் எல்லைகளை வரையறுத்து தென்னாபிரிக்க ஆட்சியாளர்களை நமீபியாவை விட்டு வெளியேறுமாறு கோரியது. இக்கோரிக்கையை தென்னாபிரிக்கஅரசு நிராகரித்ததுடன் இக்கோரிக்கை சார்பாக இயங்குவோரை கைதுசெய்தும் கொலை செய்தும் அடக்குமுறைகளை ஏவிவிட்டது. இதனால் இம்மக்கள் தென்னாபிரிக்க அரசுக்கெதிரான ஆயுதம் தாங்கிய போராட்டத்தை ஆரம்பித்தனர்.

சோவியத்யூனியன் வ்ழங்கிய உதவியுடனும், அங்கோலாவின் பக்க பலத்துடனும் SWAPO ஆயுதம் தாங்கிய போராட்டத்தை தேசிய விடுதலையை நோக்கி நெறிப்படுத்திச் சென்றது. ஐக்கிய நாடுகள் சபையானது இப்போராட்டத்தை அங்கீகரித்து 1978ம் ஆண்டில் SWAPO அமைப்பை நமீபிய மக்களின் ஏகப்பிரதிநிதிகளாக ஏற்றுக்கொண்டு செயற்படத்தொடங்கியது.

SWAPO இயக்கத்தின் வலிமை மிக்க போராட்டத்தாலும் சர்வதேசசக்திகளினால் வழங்கப்பட்ட ஆதரவுமூலமும் தென்னாபிரிக்க அரசு நமீபியாவில் பலவீனமடையத்தொடங்கியது. இதனால் அரசியல் அதிகாரத்தை இழந்து சுதந்திர நமீபியாவை பிரகடனப்படுத்த வேண்டிய நிலைக்கு ஆளானது.

1989கார்த்திகையில் ஐக்கிய நாடுகள் சபையின் மேற்பார்வையின் கீழ் பொதுத்தேர்தல் நடைபெற்றது. 72 பிரதிநிதிகளையுடைய நமீபிய அரசியல் அதிகாரப் பேரவையில் 41 ஆசனங்களைக் கைப்பற்றி SWAPO அமைப்பானது பெரும்பான்மைப்பிரதிநிதித்துவத்தைப் பெற்றுக்கொண்டது.

SWAPO இயக்கத்தின் சர்வதேசப்பிரிவின் ஸ்கண்டிநேவிய நாடுகளுக்கான பிரதிநிதியாக செயற்பட்ட நீலோ ராபோபி (Nillo Taapopi) அவர்களை எமது பத்திரிகைக்காக என்.ஆதவன் சந்தித்தபோது தெரிவித்த கருத்துகளை இங்கு தருகிறோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**•சுதந்திரமடைந்துள்ள நமீபிய மக்களுக்கும், அதைப்பெற்றுக் கொடுப்பதில்முன்னின்று உழைத்த SWAPO இயக்கத்திற்கும் முதலில் எமது வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றோம். இப் பேட்டியின் ஆரம்பத்திலே SWAPO என்ற விடுதலை இயக்கம் உருவாக் காரணமாயிருந்த சூழ்நிலைகளை விளக்குவீர்களா?**

•ஆம், நான் அதை விளக்குவதற்கு முன்னதாக நீங்கள் தெரிவித்த வாழ்த்துக்களுக்கும் ஆதரவுகளுக்கும் எனது மகிழ்ச்சியையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன். நமீபியாவில் நிலவிய நிறவெறியையும் காலனித்துவத்தையும் ஒழிப்பதற்கு SWAPO அமைப்பை உருவாக்கவேண்டிய வரலாற்றுத்தேவை ஏற்பட்டது. இதற்கு முன்னர் நமீபியமக்கள் பிரிந்து போய் இருந்தார்கள். இதனால் கொடுமை மிக்க காலனித்துவ ஆட்சியை அவர்களால் எதிர்கொள்ள முடிய வில்லை. அப்போது இம்மக்களை ஐக்கியப்படுத்தி ஒன்றுபடுத்தக் கூடிய விடுதலை அமைப்பு எதுவும் இருக்கவில்லை. இதனால் 1950 ஆண்டுகளில் சில அரசியற்குழுக்கள் ஆங்காங்கே தோன்றின. இவற்றிற்கு தேசியவிடுதலை கொட்பாடான எண்ணங்கள் மட்டுமே இருந்தன. இதனாலேயே 1960 சித்திரையளவில் SWAPO என்ற அமைப்பு உருவாக வேண்டிய தேவையேற்பட்டது. எனவே SWAPO அமைப்பானது நமீபியமக்களை ஐக்கியப்படுத்தி ஒன்றுதிரட்டி நமீபிய விடுதலைக்காக போராட வைப்பதை நோக்கமாகக் கொண்டு தோற்று விக்கப்பட்டதாகும்.

**•உங்களுடைய போராட்டவடிவம் எவ்வாறு அமையப்பெற்றுவந்தது என்பதை விபரிக்கமுடியுமா?**

•எமது போராட்ட வடிவமானது ஆரம்பத்தில் சில கோரிக்கைகளை முன்வைத்து அமைதிவழியிலேயே ஆரம்பமானது. நமீபியாவை ஆக்கிரமித்திருந்த தென்னாபிரிக்க படைகளின் கெடுபிடி களுக்கெதிராக ஐக்கியநாடுகள் சபை தலையிட வேண்டுமென்ற கோரிக்கையோடு ஆரம்பமாயிற்று. இக்கோரிக்கைகளை மையமிட்டு ஊர்வலங்களும் ஆர்ப் பாட்டங்களும், கண்டனங்களும் அமைதி வழிப்பட்டதாக இடம்பெற்று வந்தன. இதன்பின்பு காலனித்துவ வாதிகள் நமீபியமக்களை கைது செயதும், குற்றம் சாட்டியும், கொலை செய்தும் வந்தனர்.இதன் பின்பே எமது தலைவர்கள் அமைதி வழிப்பட்ட போராட்டத்துக்கு மாற்றீடாக ஆயுதம் தாங்கிய போராட்டத்தை அறிமுகப் படுத்தினார்கள். இது 1966ல் நடைபெற்றது.

ஆயுதம் தாங்கிய போராட்டம் ஆரம்பமான பின்பு தென்னாபிரிக்காவில் ஆபிரிக்க தேசிய காங்கிரசின் (ANC) செயற்பாடுகள் தடை செய்யப்பட்டது போல் எமது இயக்க செயற்பாடுகள் அரசினால் சட்டபூர்வமாக தடைசெய்யப்படவில்லை. ஆனால் நடைமுறையில் அது தடை செய்யப்பட்டிருந்தது. நாம் அரசியல் நடவடிக்கைகள் மேற்கொள்ள அனுமதிக் கப்படவில்லை. எமது தோழர்கள் கைது செய்யப்பட்டும் சித்திரவதை செய்யப்பட்டும் ஆதரவாளர்கள் நீண்டகாலமாக விசாரணைக்கூடங்களில் அடைக்கப் பட்டுமிருந்தனர். மக்கள் எழுச்சியை ஏற்பாடு செய்வதென்பது காலப் போக்கில் இயலாத காரியமாக இருந்தது. இதனால் பிற்காலப்பகுதி முழுவதும் ஆயுதம் தாங்கிய போராட்டமாகவே இருந்தது.

**•இதற்கு முன்னர் நிறவெறி ஆட்சியினர் இரு பலமான இயக்கங்களான SWAPO, ANC ஆகியவற்றின் போராட்டங்களால் சூழப்பட்டிருந்தனர். இப்போது அவர்கள் ANCயின் எதிர்ப்பை மட்டுமே எதிர்கொண்டுள்ளனர். தற்போது ANCயை ஒடுக்குவதற்கு இலகுவாக இருக்குமென கருதமுடியுமா?**

•இல்லை. நமீபியாவிற்குக்கிடைத்த சுதந்திரமென்பது நமீபிய மக்களாலும், தென்னாபிரிக்க மக்களின் இடைவிடாத செயற்பாடுகளாலும், சர்வதேசசமுகத்தின் ஆதரவாலும் கிடைக்கப்பெற்றது. இதில் ANC இன் பங்கு அளப்பரியது. முன்னர் தென்னாபிரிக்க சக்திகள் பல பிரிவுகளாகப் பிளவுபட்டிருந்தனர். தற்போது அவை தென்னாபிரிக்கா என்ற எல்லைக்குள் ஒன்றுபட்டுள்ளன. இந்நிலையில் நமீபியாவிற்கு சுதந்திரம் கிடைத்ததன் மூலம் விடுதலையின் எல்லை விரிவடைந்துள்ளதென்றே கூறவேண்டும். இதற்கு முன்னர் அங்கோலா போன்று இப்போது நமீபியா. இது எமது பிரச்சனைகளை சுருக்கியுள்ளதே தவிர மேலும் புதிய பிரச்சனைகளை உருவாக்கியுள்ளதாகக் கொள்ளமுடியாது. எமக்குக் கிடைத்த சுதந்திரத்தின் மூலம் ANC மேலும் வலுவடைந்துள்ளது.

**•நீங்கள் எதிர்காலத்தில் அறிமுகப்படுத்தவிருக்கும் பொருளாதாரக் கொள்கையானது எப்படி அமைந்துள்ளது?**

•எங்களுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் இது பற்றி தெளிவாக கூறியிருந்தோம். கலப்புப் பொருளாதார முறை யொன்றையே நமீபியாவில் அறிமுகப் படுத்த தீர்மானித்துள்ளோம். அரசுடமை க்கும் கூட்டுறவுத்தன்மைக்கும் முதன்மை யளிப்பதுடன் தனியார்துறைக்கும் வரையறுக் கப்பட்ட அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவற்றை ஒருமுகப்படுத்த மையப்படுத்தப்பட்ட திட்டமிடலையே நமீபியாவில் நாம் அமுலாக்க முயற்சிக்கின்றோம். அரசுடமை யாக்குதலில் பல சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. உற்பத்தி சாதனங்களையும் நிலம், நீர், தபாற்சேவை, போக்குவாத்து, வங்கிகள் முதலானவற்றை அரசுடமையாக்குவதில் நாம் ஈடுபட்டுள்ளோம். இதன்மூலம் தனியார் உடமைகள் மக்களுக்கு சரியான முறையில் பயன்படுகின்றதா என்பதை இலகுவாக கண்காணிக்க முடியும்.

**•இறுதியாக ஒடுக்கப்பட்ட மக்கள் நடாத்தி வரும் போராட்டங்களுக்கு குறிப்பாக இலங்கை மக்களுக்கு உங்கள் அனுபவங்களிலிருந்து நீங்கள் தெரிவிக்கவிரும்பும் செய்தி என்ன?**

•முதலில் சர்வதேச அளவில் எமது போராட்டத்துக்கு அரசியல் ரீதியிலும், ஏனைய துறைகளிலும் ஆதரவு அளித்த அனைவருக்கும் எமது நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அடுத்து குறிப்பாக இலங்கையில் போராடிவரும் தமிழ்மக்களுக்குக் கூறவிரும்புவது- அடக்குமுறை என்பது நீண்டகாலம் நீடிக்க முடியாதது. அதற்கு ஒரு முடிவு உண்டு. அது மக்களின் அபிலாசைகளின் வெளிப்பாட்டில் அமையப்பெற்ற போராட்டத்தின் மூலம் கிடைப்பது. ஆதலால் இலங்கைத்தமிழ் மக்கள் நீண்டகாலப்போராட்டத்துக்கு தம்மை திடப்படுத்திக்கொள்ள வேண்டுமெனக் கூறவிரும்புகின்றேன். ●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# "ஐரோப்பா-1992"

## ஒரு பொது நோக்கு

— இ.சுதாகர் —

1985ம் ஆண்டு ஐரோப்பிய கமிஷன் தலைவர் ஜக் டிலர் (Jaques Delors) பதவிக்கு வந்த போது உலகப் பொருளாதார வானில் ஐரோப்பா தனது தளங்களை ஜப்பானுக்கு இழந்து கொண்டிருந்தது. ஐரோப்பாவில் 1980ம் ஆண்டுகளில், 60ம் ஆண்டுகளில் ஏற்பட்டதைப் போன்ற பொருளாதார நெருக்கடி ஏற்படாத போதிலும், பெரும்பான்மையான துறைகளில் பொருளாதார தேக்கம் ஏற்பட்டுக் கொண்டிருந்தது. நவீன மின்னியல் துறையில் தன்னைப் பெருமளவு விருத்தி செய்திருந்த ஜப்பான் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்கச் சந்தைகளை மட்டுமல்லாது ஐரோப்பாவின் தொழில் நுட்பத்துறைச் சந்தைகளையும் தன்வசப்படுத்திக் கொண்டிருந்தது.

அதன் மறுபுறம் ஐக்கிய அமெரிக்கா, இரண்டாவது உலகயுத்தத்தின் பின்னர் உருவாக்கப்பட்ட சர்வதேசநாணயநிதியம், உலகவங்கி போன்றவற்றில் பெரும்பான்மையான செல்வாக்கைக் கொண்டுள்ளமையால் அதிகளவு வளர்முகநாடுகள் அமெரிக்காவின் இராணுவ, பொருளாதாரக் கட்டமைப்புக்குள் கொண்டுவரப்பட்டன.

இரண்டாவது உலக மகாயுத்தத்தில் ஜேர்மனியின் தோல்விற்குப் பின்னரும், பெரும்பான்மையான காலனித்துவ நாடுகள் சுதந்தரம் அடைந்து வந்தமையாலும், ஐரோப்பிய நாடுகளின் வர்த்தக உறவுகள் விரிவு படுவதற்கான சாத்தியக்கூறுகள் அருகிக்கொண்டு சென்றன.

இதன் வளர்ச்சிப்போக்கு இதேமாதிரித் தொடருமாயின் இன்னும் சில சகாப்தங்களின் பின்னர் உலகஅரங்கில் ஐரோப்பிய நாடுகளின் பொருளாதாரச் செல்வாக்கு ஒரு முடிவுக்குக் கொண்டுவரப்படும் ஆபத்து இந்நாடுகளில் உணரப்பட்டது.

இந்நிலைமையை மாற்றி உலகப்பங்கீட்டில் "தமக்குரிய பாகத்தையும்" பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் ஐரோப்பா தனக்குள்ளே பிணைப்பை இறுக்கிக் கொள்வதும், தமக்குள்ளே வர்த்தக உறவு குறைந்தளவு சக்தி விரயத்துடன் ஏற்படுத்திக் கொள்வதும் அவசியம் எனக்கருதப்பட்டது.

நூற்றாண்டு காலமாக ஆபிரிக்காவின் மூலையிலுள்ள நமீபியாவைக் கொள்ளையடிப்பதில் ஜேர்மனியர்களுக்கு இருந்த அதே ஆர்வம், லத்தீன் அமெரிக்காவிலுள்ள செவ்விந்தியர்களை கொலை செய்வதில் ஸ்பானியர்களுக்கு இருந்தது.

இலங்கைத்தீவை மாறி மாறிச் சூறையாடி தமது சொத்துரிமையாக்கி தமக்குள்ளே பிரித்துக் கொண்ட போதே வெள்ளைத்தோல் மனிதன் தனக்குள்ளேயுள்ள ஒற்றுமையை இனங்காட்டிக்கொண்டான். கீழைத்தேச மக்களது கலாச்சாரத்தைப் பறிப்பதிலும், அவர்களை பல்லாயிரக்கணக்கில் கொலை செய்வதிலும், தமக்கு அடிமையாக்குவதிலும் பிரான்சுக்கும், பிரிட்டனுக்கும் ஸ்பெயினுக்கும் ஏனைய ஐரோப்பிய நாடுகளுக்கும் எவ்வித வேறுபாடுகளும் இருக்கவில்லை.

இவ்விதமாக நூற்றாண்டு காலமாக ஏற்பட்டிருந்த ஒற்றுமை 1992ம் ஆண்டு ஏற்படப்போகும் ஐரோப்பிய பொதுச்சந்தைக்கு முன் நிபந்தனையாக அமைந்துள்ளது.

"ஐரோப்பா 1992" என்பது பொருளாதாரரீதியில் ஐரோப்பிய நாடுகள் தமக்குள்ளே இறுக்கத்தை ஏற்படுத்த வேண்டுமென்பதை அடித் தளமாகக் கொண்டது.

1992ம் ஆண்டு உருவாகப்போகும் ஐரோப்பிய பொதுச்சந்தையின் முக்கிய நோக்கம் ஐரோப்பாவில் பொருளாதார சக்தியைப்பெருக்குவதுதான். இதற்காக முதலாளித்துவத்தின் தத்துவக்கோட்பாடுகள் அத்தனையையும் பாவிப்பதென முடிவு செய்யப் பட்டுள்ளது. ஐரோப்பிய நாடுகளுக் கிடையேயுள்ள அத்தனை தடைகளையும் களைந்தெறிவதன் மூலம் இதை நடைமுறைப்படுத்துவதாக உள்ளது.

ஐரோப்பிய பொதுச்சந்தைக் கோட்பாடுகளை வரையறுக்கும் இரண்டு முக்கிய ஆவணங்களான "வெள்ளைப்புத்தகம்" (The White Book), "ஐரோப்பிய ஆவணம்"(The European Records) இல் இச்சந்தைக்கான வரைவிலக்கணம் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது.

"பொருட்கள், மனிதர்கள், சேவை, மூலதனத்தின் போக்குவரத்தை உறுதி செய்யும், பொருளாதார தடைகளற்ற பிரதேசம்".

இதனடிப்படையில் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே பொருட்கள் ஒரு நாட்டிலிருந்து ஏனைய நாட்டுக்கு வரி எதுவுமின்றி கொண்டு செல்லப்படுவதும், விற்கப்படுவதும் அல்லது வாங்குவதும் சாத்திய மாவதுடன், ஐரோப்பியர்கள் வெவ்வேறு நாடுகளில் வேலை செய்யக்கூடியதுமாக இருக்கும். ஒரு நாட்டு முதலாளிகள் ஏனைய நாட்டில் முதலீடுகளை எவ்வித தடையுமின்றி போடக்கூடியதாக இருக்கும். அத்துடன் வங்கிகள், காப்புறுதி நிறுவனங்கள் போன்றவையும் ஏனைய நாட்டுக்குள் எதுவித தடையுமின்றிப் புகமுடியும்.

இதன் மூலம் சிலநாடுகள் ஆரம்பத்தில் நெருக்கடிகளை ஏற்கவேண்டி வருமென்பதும், சில ஏற்கனவே பலமாகவுள்ள நாடுகள் கூடுதல் இலாபம் பெறும் என்பதும் சில நாடுகளுக்குத் தயக்கத்தை உண்டாக்கின. எனினும் ஒரு நீண்ட காலப் போக்கில் இவ்விணைவு ஏனைய உலகத்துடன் போட்டி போட வல்லமையை ஏற்படுத்தும் என்பதனல் ஐரோப்பிய நாடுகள் தமக்குள்ளே விட்டுக்கொடுப்பையும் சமசாரத்தையும் ஏற்படுத்த முன்வந்துள்ளன.

ஐரோப்பிய இணைவுக்கான அத்தி வாரம் இன்று நேற்று ஏற்படுத்தப்பட்ட விஷயமல்ல; அதற்கான அடித்தளங்கள் நூற்றுண்டு காலமாக போடப் பட்டுள்ளது என்பதை இங்குள்ள அறிவியலாளர்கள் புரிந்திருந்தார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டாம் உலகமகாயுத்தத்திற்குப் பின்னர் முதன்முதலில் ஐரோப்பிய நாடுகளுக்கிடையே 1952ம் ஆண்டு கரி, உருக்கு போன்றவற்றிற்கான பொதுநிறுவனம் (European Community for Steal and Coal) உருவாக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 1957ம் ஆண்டு ஐரோப்பிய அணு பொது அமைப்பும் (European Atom Community) ஐரோப்பிய பொருளாதார பொது அமைப்பும் (European Economic Community) அமைக்கப்பட்டது.


இதனைத்தொடர்ந்து வந்த காலங்களில் ஐரோப்பிய நாடுகளுக்கான பொதுச்சட்டங்களை உருவாக்க வேண்டிய அவசியம் உணர்த்தப்பட்டது. இதன் பேரில் 1967ம் ஆண்டு ஐரோப்பிய அமைச்சரவை, ஐரோப்பிய பொதுவமைப்புக் கமிஷன், ஐரோப்பிய சபை என்பன நிறுவப்பட்டன.

ஐரோப்பிய பாராளுமன்றம் 1979ம் ஆண்டு நிறுவப்பட்டு அதனுடைய 518 பிரதிநிதிகளும் ஐரோப்பிய மக்களால் நேரடியாகத் தெரிவு செய்யப்பட்டபோதிலும், ஐரோப்பிய அவையில் முடிவெடுக்கும் சக்தியை 12 பேரடங்கிய ஐரோப்பிய அமைச்சரவையே கொண்டுள்ளது.

ஐரோப்பிய வளர்ச்சியை மட்டுமின்றி அமெரிக்கா, ஜப்பான் கடைப்பிடிக்கும் தற்போதைய புதிய அணுகு முறைகளை அவதானித்து வரும் பொருளியல் நிபுணர்கள் '90 சகாப்தத்தில் முதலாளித்துவம் தமக்குள்ளே போட்டிகளை அதிகரித்து வருவதன் விளைவாக அனைத்து நாடுகளும் தமது நாட்டுக்குள்ளே போட்டிகளை அதிகரிக்க வேவண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளன எனக் கருதுகின்றனர்.

இதன் முடிவில் ஐரோப்பாவைப் பொறுத்தவரை பத்து நிறுவனங்கள் அனைத்தையும் தூக்கிச் சாப்பிட்டுவிட்டு ஜாம்பவன்களாக ஏனைய நாட்டுக்குப் போட்டியாக இருக்கமுடியும். ஐரோப்பிய சிறிய நிறுவனங்கள பல அமெரிக்க, ஜப்பான் பொருட்களுடன் போட்டி போட முடியாமல் இந்தப்பந்தயத்தில் தோல்வி கண்டு வருவதால் ஜப்பானுக்கும், அமெரிக்காவிற்கும் பொருளாதார ரீதியில் பலமாக நிற்கும் வகையில் நிறுவனங்கள் பல உருவாக்கப்பட்டு வருகின்றன.

நெதர்லாந்தின் மிகப் பெரிய போட்டி வங்கிகள் எ.பி.என்.(ABN: Algemene Bank Nederland) அமெரோ(Amro: Amsterdam-Rotterdam Bank) ஆகியன ஒன்றாக இணைந்து தம்மைப் பலசாலி யாக்கியுள்ளன. ஜேர்மனியில் Nixdorf, Siemens உடன் இணைக்கப் பட்டுள்ளது. டென்மார்கில் மூன்று



வெளியீடொன்று 1992 இன்பின்னான ஐரோப்பாவின் நுழைவாயில்கள் இப்படித்தான் இருக்குமென சித்தரித் திருக்கிறது.(9th National Congress of Refugees and Immigrants)

பெரிய போட்டி வங்கிகள் ஒன்றாக இணைந்துள்ளன.

இந்த நிலை தொடர்ந்து வளர்ந்து கொண்டு போனால் ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் 90%க்கு மேல் ஒரு சில நிறுவனங்களின் கைகளிலும் அதன் மூலம் அவை தமது சட்டங்களை நாட்டில் ஏற்படுத்தக் கூடிய வல்லமையிலும் இருக்கும்.

பெருமளவு மூல்தனம் ஒரு சில நிறுவனங்களின் கைகளில் வருவதன் மூலம் தொழிலாளர்களின் உரிமைகளைப் பறிக்கக்கூடியதாக இந்நிறுவனங்கள் பலம் பெற்று விடக்கூடும் என சமூகவியலாளர்கள் பலர் கருதுகின்றனர். சிறிய நிறுவனங்களும் தாம் நிலைத்து நிற்பதற்காக வேலை நிலைமைகளை இறுக்கமாக்க வேணடிய அவசியத் திற்குத் தள்ளப்படுகின்றன.

ஐரோப்பிய நாடுகளுக்குள் இவ்விணைவு ஏற்படுத்தும் இப்பிரச்சினைகளை விட வளர்முக நாடுகளிலும் பாரியளவு தாக்கங்கள ஏற்படப் போகின்றன. சோசலிச நாடுகளில் அண்மைக் காலங்களில் ஏற்பட்டு வந்த மாறுதல்களின் காரணமாக முதலாளித்துவ நாடுகள தமது உள்நாட்டுப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு புதிய எதிரியைக் கண்டு பிடிக்க வேண்டிய நிலைமையில் உள்ளன.

இம்மாற்றத்துக்கு பனாமா முதலில் தன்னைப்பலி கொடுக்க நேரிட்டது. கியூபாவும் லிபியாவும் ஈராக்கும் தொடர்ந்து ஏகாதிபத்திய நாடுகளின் நேரடி அச்சுறுத்தல்களை எதிர் நோக்கி வருகின்றன. எதிரியாக சித்தரிப்பதற்கு எதிர் காலத்தில் ஐரோப்பிய நாடுகளில் வாழும் கறுப்பர்கள்(அதனுள் நாமும் அடங்குவோம்) பயன்படுத்தப்படுவர்.

ஐரோப்பிய நாடுகளுக்கிடையே யுள்ள சுங்க அதிகாரிகள் எதிர்காலத்தில் ஐரோப்பாவினுள் யாரும் நுழையாதபடி கண்காணிக்கப் பயன்படுத்தப்படுவர். ஐரோப்பிய நாடுகளுக்குள் பொலிசார் இணைந்து வேலை செய்வதன் மூலமும் கணணி (Computer) இல் சேகரிக்கப்படும் தகவல்களைத் தமக்குள் பரிமாறுவதன் மூலமும் இங்கு வாழும் வெளிநாட்ட வர்களின் சுதந்திரம் முற்றுமுழுதாகக் கட்டுப்படுத்தப்படுமென்பதில் ஐய மில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வெளிநாட்டவரை அச்சுறுத்தும் ஜேர்மனியின் புதிய சட்டங்கள்!

## ஜேர்மனியின் புதிய சட்டங்கள் அயல் நாடுகளுக்கும் ஒரு ஊக்குவிப்பு

க.கவிதா

"ஐரோப்பாவில் மாறிவரும் தற்போதைய சூழ்நிலைகளில் இருந்து நாம் ஜேர்மனியின் தனித்துவத்தை காப்பாற்ற வேண்டியிருக்கின்றது. எமது இறைமையைப் பாதுகாக்கவும், எமது தேசிய அடையாளத்தை நிலைநாட்டவும் வேண்டிய அவசியம் இப்போது எமக்கு ஏற்பட்டுள்ளது. இதற்காக நாம் வெளிநாட்டவரின் வருகையை எல்லா வழிகளிலும் கட்டுப்படுத்த வேண்டியுள்ளது. இதனாலேயே வெளிநாட்டவர்களுக்கான புதிய சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென வலியுறுத்திக்கூற விரும்புகின்றேன்."

இவ்வாறு மேற்கு ஜேர்மன் அரசின் உள்நாட்டு விவகார அமைச்சர் வோல்ப்காங் வொப்லே(Wolfgang Schauble) தமது பாராளுமன்ற உரையின் போது தெரிவித்திருந்தார். மேற்கு ஜேர்மனியில் வதியும் வெளிநாட்டவர்களுக்கான புதிய சட்டமூலம் ஒன்றை பாராளுமன்றத்தில் விவாதத்திற்கு விடப்பட்டபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருந்தார்.

இவர் மேற்கு ஜேர்மன் அரசின் சார்பாக பாராளுமன்றத்தில் சமர்ப்பித்த புதிய சட்டங்களின் முக்கிய பிரிவுகள் பின்வருமாறு:

(1).மாநிலங்கள் எதுவும் பிரத்தியேக சட்டங்கள் எதையும் இனிவரும் காலங்களில் இயற்றமுடியாது. வெளிநாட்டவர் பற்றிய அனைத்து சட்டங்களும் மத்திய அமைப்பான ஜேர்மன் சமஷ்டிக் குடியரசு பாராளுமன்றத்தின் மூலம் மட்டுமே இயற்ற முடியும்.

(2).வெளிநாட்டு விவகாரங்களிற்கான பொலிஸ் துறை, குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவு, அரச ஸ்தாபனங்கள், வங்கிகள் முதலான அனைத்துத்துறைகளும் தாம் வெளிநாட்டவர்களுடன் மேற்கொண்டுள்ள அனைத்து தொடர்புகளையும், தகவல்களையும் பரிமாறிக்கொள்ள வேண்டும். வெளிநாட்டு பொலிஸ் இலாகாவை மையப்படுத்தியதாக இவற்றை ஒன்று திரட்டி நேரடிக் கண்காணிப்பில் வைத்துக்கொள்ள உதவுதல் வேண்டும்.

(3).வெளிநாட்டவர்களுக்கான வதிவிட அனுமதி வழங்கலை மூன்று வகைகளாக்குதல்.

(4).பதினாறு வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் ஜேர்மன் அரசின் அனுமதி(Visa) கிடைக்கப்பெற்றே இனிமேல் வரமுடியும். இங்கு பிறக்கும் குழந்தைகளுக்கான ஜேர்மன் பிறப்பு அத்தாட்சி பதிவு இனிமேல் வழங்கப்படமாட்டாது. பெற்றோர் எந்த நாட்டைச் சேர்ந்தவர்களோ அந்நாட்டின் பிறப்பு அத்தாட்சிப்பத்திரத்தை பெற்றுக் கொள்ள வேண்டியவராக இருப்பர்.

(5).ஒவ்வொரு ஜேர்மனிய பிரஜையும் தேவை ஏற்படும் போது வெளிநாட்டவர்களின் நடவடிக்கைகளை கண்காணித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள ஜேர்மன் அரச அதிகாரிகளிற்கு உதவ வேண்டும்.

மேற்படி பிரதான உள்ளடக்கங்களையுடைய இச்சட்டமூலமானது வெளிநாட்டவர்களுக்கு சார்பான அனைத்து சக்திகளாலும் வன்மையான கண்டனத்திற்கும், விமர்சனத்திற்கும் உள்ளாகியது. சர்வதேசமன்னிப்பு சபையும் ஜேர்மனி நலன்புரி சங்கங்களும், மனித உரிமை அமைப்புக்களும், தொழிற்சங்கங்களும், இதர அகதிகளுக்கு உதவும் ஸ்தாபனங்களும் இச்சட்டமூலத்தை வன்மையாக எதிர்த்தன. இச் சட்டமூலத்துக்கு எதிராக இவர்களால் ஆர்ப்பாட்ட ஊர்வலங்களும், கண்டனக்கூட்டங்களும் தொடர்ச்சியாக நிகழ்த்தப்பட்டு வந்தன.

ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் பிரதான எதிர்க்கட்சிகளான சமூக ஜனநாயகக் கட்சியும்(SPD) பசுமைக் கட்சியும்(Die Gruene) பாராளுமன்றத்தில் விவாதம் நடந்தபோது பலத்த ஆட்சேபணைகளை தெரிவித்திருந்தன.

"ஜேர்மனிக்கு வருபவர்களுக்கு சகல விதமான சமூக, கல்வி, வாழ்க்கை வசதிகளை வழங்குவோமென உத்தரவாதமளிக்கும் ஆளும் கட்சியினர் நடைமுறையில் இதற்கு மாறாகவே நடந்து வருகின்றனர். இவ் வெளிநாட்டவர்களை பற்றி பேசுவதற்குக்கூட இக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் தயக்கம் காட்டி வருகின்றனர்.

கடந்த வருடம் மாத்திரம் 7,50,000 மக்கள் இந்நாட்டிற்குள் வெளிநாட்டவர்கள் என்ற வகையில் வந்துள்ளார்கள். இந்த வருடம் இத்தொகை 3 முதல் 5 இலட்சம் வரை இருக்கக்கூடுமென எதிர்பார்க்கப்படுகின்றது. கடந்த ஆண்டுகளில் வெளிநாட்டவர்கள் மீதான சில நடைமுறைகளை இவ்வாறாக கடுமையாக கடைப்பிடித்ததன் மூலம் 5% வெளிநாட்டவர்களுக்கே அரசியற் தஞ்சம் கிடைத்திருக்கின்றது. குறிப்பாக மூன்றாவது உலக நாடுகளில் இருந்து அகதிகளின் வருகை வெகுவாகக் குறைந்து போயுள்ளது.

ஜேர்மனியின் எல்லாக்கதவுகளும் ஜேர்மனியர்களுக்கும் அவர்களது பரம்பரையினருக்கும் மாத்திரமே திறக்கப்பட்டிருக்கிறது. ஜேர்மனியில் சிறுபான்மை மக்களாக வாழ்ந்து வரும் வெளிநாட்டவர்களுக்கு இவ் வாய்ப்புக்கள் மறுக்கப்படுகின்றது. ஜேர்மன் தேசியவாதமே மேலோங்கி நிற்கிறது."

இவ்வாறு பாராளுமன்ற விவாதத்தின் போது பசுமைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




ஜேர்மனியில் இயற்றப்பட்ட புதிய வெளிநாட்டவர் சட்டத்தை எதிர்த்து 24.4.90 அன்று பேர்லினில் பல அமைப்புகள் ஒன்றிணைந்து நடாத்திய ஆர்பாட்ட ஊர்வலம்.

கட்சியின் பிரதிநிதி பிரிகா றென்ஸ்(Frika Trenz) தனது உரையில் கண்டனம் தெரிவித்திருந்திருந்தார்.

பாராளுமன்ற விவாதத்தின் போது மற்றுமொரு எதிர்க்கட்சியான சமூக ஜனநாயகக் கட்சியும்(SPD) இச் சட்டமூலத்தை கண்டித்ததுடன் வெளிநாட்டவருக்கு வழங்க வேண்டிய உரிமைகள் பற்றியும் தெரிவித்திருந்தது.

*"நாம் வெளிநாட்டவர்களுக்கு ஒரு நல்ல அயலவராகவே இருக்க விரும்புகின்றோம். ஓர் இலகுவான இரட்டைப்பிரஜாவுரிமையை அவர்களுக்கு வழங்குவதையே நாம் விரும்புகின்றோம். இவ் இரட்டைப்பிரஜாவுரிமையை வழங்குவதன் மூலம் ஜேர்மன் சமூகத்தை படுகுழியில் தள்ளுகின்றோம் என ஆளும் கட்சி நண்பர்கள் கூறுவது எனக்கு புதிராக இருக்கிறது. இங்கு வாழும் வெளிநாட்டவர்களின் சமூக பொருளாதார வாழ்க்கைத்தரத்தை உறுதிப்படுத்துவதற்குரிய சட்டமூலங்களையே இயற்ற வேண்டுமென கேட்டுக்கொள்ளுகின்றோம். இதற்காக அவர்களுக்கு இரட்டைப் பிரஜாவுரிமையும், வாக்குரிமையும் வழங்கப்பட வேண்டுமென வலியுறுத்துகின்றோம்."*

இவ்வாறு சமூக ஜனநாயக கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் தோமஸ் ஷ்றேடர்(Thomas Schroeder) தமது விவாத உரையின் போது தமது கட்சியின் நிலைப்பாட்டினை தெளிவுபடுத்தினார்.

எதிர்கட்சிகளின் ஆட்சேபணைகளும், கண்டனங்களும் வெளிவந்தபின் இவற்றிற்கு பதிலளிக்கும் வகையில் உள்நாட்டு விவகார அமைச்சர் வோல்ப்காங் ஸொப்லே தனது உரையில்

*"நடைமுறைக்குக் கொண்டு வரப்படவிருக்கும் இப்புதிய சட்டமூலத்தில் புதிய கோரிக்கைகள் எதற்கும் இடமளிக்க மாட்டேன் என்பதை உறுதியாக உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். வெளிநாட்டவர்களுக்கான வாக்குரிமைக்கோ, பிரஜாவுரிமைக்கோ இச்சட்டத்தில் இடமிருக்காது. இவ்வுரிமைகளை வழங்குவது இச்சட்டத்தின் நோக்கங்களையே சிதறடித்துவிடும்" என்றார்.*

பாராளுமன்ற விவாதங்களை தொடர்ந்து வெளிநாட்டவர்களுக்கான புதிய சட்டமூலமானது ஜேர்மன் சமஷ்டிக் குடியரசின் பாராளுமன்றத்தில் 27.4.1990. அன்று நிறைவேற்றப்பட்டது. அது 1991 முதல் அமுலுக்குக் கொண்டுவரப்படவுள்ளது.

இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்ட பின்பு ஜேர்மனியில் தஞ்சமடைந்துள்ள வெளிநாட்டவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள பீதியைப் போக்கவும் தமது கட்சியின் நிலைப்பாடுகளுக்கு அமையவும் பிராதான எதிர்க்கட்சிகளான சமூக ஜனநாயக கட்சியும் பசுமைக் கட்சியும் மாற்று யோசனைகள் குறித்து ஆராய்ந்து வருகின்றன.

ஜேர்மனியில் 1960ம் ஆண்டு முதல் கட்டம் கட்டமாக வெளிநாட்டவர்கள் வருகை தந்துள்ளனர். துருக்கி, ஈரான், குர்திஸ்தான், பாலஸ்தீனம், எதியோப்பியா, ஆப்கானிஸ்தான், சில்லி, பாகிஸ்தான், கானா, நைஜீரியா, வியட்நாம், இலங்கை, இந்தியா, பங்களாதேஸ் ஆகிய நாடுகளில் இருந்தே அகதிகளாக இவர்கள் வந்துள்ளனர். இவர்களின் வருகையினால் ஜேர்மனியில் ஏற்பட்டுள்ள உள்நாட்டு நெருக்கடிகளின் காரணமாக இது முன்னணி அரசியல் சர்ச்சையாக மாறியுள்ளது.

ஜேர்மன் தேசியவாதமானது தன்னை நிலை நிறுத்த வெளிநாட்டவர்களுக்கு எதிரான போக்கை கடைப்பிடிக்கத் தொடங்கியுள்ளது. இதற்கு அடையாளமாகவே புதிய சட்டங்கள் நிறைவேறியுள்ளன. இச் சட்டங்களின் உள்ளடக்கமானது ஐரோப்பாவின் ஏனைய நாடுகளுக்கும் ஊக்குவிப்பாய் அமைந்துள்ளது. அவர்கள் பின்பற்றுவதற்கும் வாய்ப்புக்களை வழங்கியுள்ளது.


●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## துப்பாக்கியின் மொழி



சோளகத்தின் வெப்பம்
ஈழத்தை தடவிப்பார்க்கும்.
வயல்வெளிகளில் பசுமை படர்ந்த
காட்சிகள் மங்கிப் போகும்!
தெருக்களில் புழுதிப்புகை சூழும்.
மீண்டும் மரண வாழ்வுக்குள்
ஜப்பானிய மூங்கில் வீடுகள்
மக்கள் மனங்களில் பதியும்.
இரத்த ஆறுகள் வயல் வெளிகளைத்
தடவிச் செல்லும்.
கோயில்கள் தோறும்
மானுடம் அரற்றும்.
சிவன் கோயிலடி தீயால் குளிக்க
குளக்கோட்டன் பூமி
புகையுள் மறையும்.
வவுனியா நகரம்
மௌனித்து நிற்கும்.
ஷெல்லடியால் திணறும்
யாழ்ப்பாண படலைகள் தோறும்
மரணப் பாடல்கள்.
வலிகாமம் வலுவிழந்து போக
மட்டக்களப்பு மனம் குமுறும்

எங்கும் அகதிகள்.
தாயகத்தை இழந்து
தாயகத்திற்கான போராட்டமென
யாருடைய முதுகில் பிரச்சாரம் செய்வோம்

உலகச் சந்தையில்
எங்கள் குருதியும், சதையும்
எத்தனை நாளைக்கு

துப்பாக்கியின் மொழிகள்
இன்றைக்கு மட்டுமல்ல
என்றைக்குமே
வேண்டாதவை தான்
மக்களுக்கு.

-ஜி.எம்.பரம்சோதி-



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்